உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு „ ரூ. 5-0-0
R. No. M. 3066 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

# பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.
ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, பவ-ஞு மார்கழி-மீ 16-உ (30—12—1934) | மலர் 19.

## உயர்ந்தோர் என்பவரை வினவுதல்.

(கடம்பங்குளம் தோழர் ப. நாராயணன் அவர்கள் இயற்றியது)

பாரதியாரின், "ஆயிரஞ்சாதிகள்" என்ற மெட்டு.

1. எந்த வகையினி லெங்களைத் தாழ்ந்தவ
ரென்றுமே சொல்லுகிறீர்?—நன்கு
சிந்தை தெளியவே நாங்களிதனையே
செப்புவோம் கேட்டிடுவீர்

2. முகத்தினி லேபிறந் தோமென்று சொல்கின்ற
மூட மதியினர்காள்—அது
அகத்தினி லேயருள் உற்றவர் சொல்லிடும்
ஆண்மை மொழியாமோ?

3. கல்வியைக் கற்பதில் உங்களைப் போலயாம்
கற்க வலியிலையோ?—பல
செல்வம் பெருக்கிடுங் கைத்தொழில் தன்னிலுஞ்
சென்றதென் எம்மைவிட?

4. தேசத்தைக் காத்திடச் சீவனை விட்டுச்
சிறந்தவர் நாங்களன்றோ?—பல
பாசத்தி லாழ்ந்து பதுங்கி யிருந்திட்ட
பாவியர் நீங்களன்றோ?

5. தேசத்தைக் காட்டிக் கொடுத்தவர் தம்மில்
சிறந்த தொகையினரார்?—பல
மோசக் களஞ்சிய நூல்களியற்றியே
மெய்ம்மை யழித்தவரார்?

6. சாதிப்பிரிவுகள் நாங்கள்செய் தோமென்று
சாற்று மறிவிலிகாள்—பல
நீதிகள் சொல்லும் மனுநெறி தன்னையும்
நீங்க ளறியீரோ?

7. பாவிகள் செய்யுங் கொடுமையி லாயிரம்
பங்கு புரியுகின்றீர்—பணந்
தாவிப் பிடிப்பதிலுங்களுக் குநிகர்
தரணியிற் றானுளரோ?

8. தீண்டா தவர்களென் றெங்க ளநேகரைத்
தெருவில் வரத்தடுக்கும்—பொல்லா
ஆண்டகை யற்ற அறிவிலி காளினி
யாகுமோ வுங்கள் செயல்?

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | |
|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 |
| விவாக விடுதலை | 0-4-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 |
| மனித உற்பவம் | 0-8-0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| The Right of Temple Entry (English) | 1-0-0 |
| The Crux of the Indian Problem (English) | 1-0-0 |
| உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| சாமிகளின் அடிமை | 0-12-0 |
| லோகல்போர்டு ஆக்ட் (சென்னை) | 2-0-0 |
| பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை | 0-8-0 |
| பெண்ணுரிமைக் கீதங்கள் | 0-1-0 |
| சமதர்மக் கீதங்கள் | 0-0-6 |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## இயக்கப் பாட்டுப் புத்தகங்கள்.

இப்புத்தகங்கள் சுயமரியாதை, சமதர்மம் ஆகிய கொள்கைகளை விளக்கி அறிய கருத்துக்களுடன் பாடப்பட்டவை.

### சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள்.

பாரதியார் நடையையும், வர்ணமெட்டுகளையும் அனுசரித்து கடம்பங்குளம் தோழர் ப. நாராயணன் அவர்களால் பாடியது. நல்ல பதிப்பு. ஈ. வெ. ராமசாமி படத்துடன்

விலை அணு 0—4—0.

### சுயமரியாதைப் பாடல்கள்.

விலை அணு 0—2—0.

### சமதர்மப் பாடல்கள்.

நாகைத் தோழர் வி. சாமிநாதன் அவர்களால் பாடியது.

விலை அணு 0—1—0.

### சமதர்மக் கீதங்கள்,

தோழர் ப. ஜீவானந்தம் அவர்களால் பாடியது.

விலை அணு 0—1—0.

### பெண்ணுரிமைக் கீதங்கள்.

தோழர் ப. ஜீவானந்தம் அவர்களால் பாடியது.

விலை அணு 0—1—0.

### மாதர் சுதந்திரம்.

இது பண்டிதர் சாமி சிதம்பரனுர் அவர்களால் எழுதப்பட்டதாகும். இந்நூலில் பெண்கள் எவ்வெவ்வழிகளில் சுதந்திரம் பெறவேண்டும் என்பதும், பெண்கள் சுதந்திரத்துக்கு ஆண்கள் எவ்வளவு முட்டுக்கட்டையாய் இருக்கிறார்கள் என்பதும், பெண்கள் எப்படி தங்கள் சுதந்திரத்துக்கு பாடுபட வேண்டும் என்பதும் விளக்கமாக்கப்பட்டிருக்கிறது.

விலை அணு 8.

### மனித உற்பவம்.

இது தோழர் சிங்காரவேலு B. A., B. L, அவர்களால் எழுதப்பட்டது. பிரபஞ்ச உற்பத்தி—ஜீவராசிகள் சூரிய சந்திரன் உற்பத்தி—மனிதர்கள் எப்படி உண்டானார்கள் என்னும் விஷயங்களும் மனிதர்கள் ஜீவன்கள் பூர்வ சரித்திரம் இன்னது என்றும், இனி ஏற்படப்போகும் மாறுதல் என்ன என்றும் சரித்திரம்—விஞ்ஞானம் ஆகியவைகளை ஆதாரமாய் கொண்ட ஆராய்ச்சி நூல்.

விலை அணு 8.

### சாமிகளின் அடிமை.

இந்நூல் அமரிக்க சீர்திருத்த மாது மிஸ். மேயோ அம்மையால் எழுதப்பட்ட தேவதாசிகள் என்னும் ஆங்கிலப்புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. 170-பக்கம் கொண்டதாய் நல்ல கிளேஸ் காகிதத்தில் தெளிவானஎழுத்தில் பதிக்கப்பட்டது. ஏற்கனவே 1—8—0 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இப்போது விலை அணு 8.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணு ஸ்டாம்ப் கூடுதலாக அனுப்பவேண்டும்.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# மதமொழிக்கும் உலகப்புரட்சி.

## ஜோசப் மெக்காபி எழுதியதின் மொழிபெயர்ப்பு.

(முன் தொடர்ச்சி)

நமது ஜனங்களின் மூளையும், மனமும் புரட்சியிலேயே படிந்திருக்கின்றன. இவ்விஷயங்களில் உண்மைகளை நான் இங்கு விளக்க விவாதஞ் செய்யப்போவதில்லை என்பதை வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அது ஒரு தக்க சமயத்தில் வரும். நவீன மதஸ்தரும் கிறிஸ்து மதத்தை ஒழிக்க விரும்புகிறார்கள். மனிதனுடைய அறிவு புரட்சியில் இருக்கிறது. ஏனென்றால் புதிய கிறிஸ்து மதத்திலும் ஒவ்வொரு விஷயமும் பெரியோர்களால் எதிர்க்கப்படுகிறது. அம்மதக்கொள்கை ஒருவரிடத்தில் எவ்வளவு விரிவாக இருக்கிறதோ அவ்வளவுக்கும் எதிர்ப்பு இருந்தே தீரும். மனிதனுடைய மனமும் புரட்சியிலிருக்கிறது. ஏனென்றால் அழகிய அபிப்பிராயம் வாழ்க்கைத் துன்பத்தில் கடவுள் சம்பந்தம் இருப்பதாகக் கொள்வதற்கும், கடவுள் இருப்பது உண்மையானாலும் அவர் முன்பு பிரார்த்தனை செய்யவும், புகழுரை சொல்லவும், கீழே விழுந்து பணியவும் நியாயமாகவே மறுக்கிறது.

முடிவாக இருதயத்வனியிடம் மற்றொரு முடிவான சேதியிருக்கிறது. விவாதத்திற்குரிய ஒவ்வொரு மதப்பிரச்சினைக்கும் அநேக புஸ்தகங்கள் எழுதப்பட்டுப் புஸ்தக சாலைகளில் வைக்கப் பட்டிருக்கின்றன. கடவுளை எடுத்துக்கொண்டால், தற்கால மத ஆராய்ச்சிக்காரர்கள் ஒரு டஜன் வித்தியாசக் கொள்கையுடையவர்களாக இருக்கிறார்கள். எதிர்மறையாகவும், உடன்பாடாகவும் அவைகளைப்பற்றி நூற்றுக்கணக்கான புஸ்தகங்கள் இருக்கின்றன. விஷயத்தில் பூரண ஞானம் பெற வேண்டுமானால் ஒருவர் அவை அனைத்தையும் படித்தறிய வேண்டும். கடவுளைப்பற்றிய உண்மை அறிவது மகாகஷ்டம். மனோதத்துவ ஆராய்ச்சியை விட அது கஷ்டமானது. ஆத்மாவின் நித்தியம் என்னும் விஷயமும் அப்படிப்பட்டதுதான். அப்புத்தகங்களில் ஒரு டஜன் படித்து, ஆத்மார்த்தம், கடவுள் வழிபாடு, அகியவைகளைப் பரீட்சித்து, மனதின் பரிணமம், மூளையின் இயக்க தத்துவம் முதலியவைகளை ஆராய்ச்சியும் செய்து பார்த்தால் ஒருவர் "ஓ! இது முடிந்த விஷயமல்ல"வென்பார். "நமக்கு வேறு விஷயங்கள் இருக்கின்றன. இவைகளை மற்றொரு நாள் கவனிக்கலா"மென்பார்.

மத ஆராய்ச்சி அவ்வளவு பெரிதாக இருக்கிறது. அதற்கு அநேக விஷயங்களின் ஞானம் வேண்டும். அதனால்தான் புதிய தலைமுறை அதை விட்டு விட்டது. மிகத்தேர்ச்சியடைந்தவர்களும், நிபுணர்களும் மதவிஷயங்களைப் படித்தறியலாம். நம்மில் அநேகருக்கு நேரமில்லை. சிலர் உலகின் வேறு முன்னேற்றத் துறையில் உழைப்பர். சிலர் பொருளீட்டலில் இருப்பர். சிலர் சுகமனுபவித்துக் கொண்டிருப்பர். நமது மதத்தைப்பற்றி இருப்பதில்லை. அது நமது வாழ்க்கை நல்லதென்றும், சூரிய வெளிச்சம் உற்சாகமாயிருக்கிறதென்றும், வெளிச்சம் இருக்கும் போதே நாம் ஆடிக்களிக்க வேண்டுமென்றும் சொல்லுகிறது. சில மாதங்களிலோ, அல்லது சில நாட்களிலோ மத விஷயங்களில் முடிவுகாண நினைப்பவன் அறியாமை மிகுந்தவனேயாவன். தற்கால உலகம் பகுத்தறிவு கொள்கையுடையதல்ல. அது நாஸ்திகத்திலுமில்லை. அது கிறிஸ்து மதத்தினதாகவுமில்லை. அது மறு உலகத்தைப்பற்றிய சண்டைகளால் களைப்புற்றிருக்கிறது. அது உலகக் கஷ்டத்தைக் குறைக்கவே உறுதி செய்திருக்கிறது.

### அடுத்தது என்ன?

### 7-ம் அத்தியாயம்.

அடுத்த விஷயம் பிரளயம் என்பது மதத்தின் உதவியில்லாமல் நாம் நாகரீக வாழ்வு நடத்த முடியாதென்று எண்ணற்ற ஆடவரும், பெண்டிரும் கருதுகிறார்கள். இக்காலத்தில் அமெரிக்காவில் சில பட்டணங்களிலுள்ள சுவர்களில் பெரிய விளம்பரங்களை ஒட்டி பட்டண வாசிகளைக் கோவிலுக்குப் போகும்படி தூண்டுகிறார்கள். படங்களால் விஷயம் விளக்கப்படுகிறது. கடவுளற்ற உலகத்தில் தீமையும், பலாத்காரமும், கொடுமையும் ஆதிக்கம் செலுத்துவது போலபடங்களில் காட்டி அமெரிக்காவைப் பயமுறுத்துகிறார்கள். உலகத்தில் இதுவே கிறிஸ்தவர்களின் யதார்த்தமான நம்பிக்கை.

அவ்விளம்பாத்தில் உண்மை ஒன்றும் கிடையாது. வால் நட்சத்திரம் ஒன்று கொள்ளை நோய்க்கும், கொடுந் தீமைக்கும் ஆஸ்பதமான விதைகளைத்தன் நெருப்பு வாலிலிருந்து தெளித்தது என்ற பழைய காலத்து நம்பிக்கைக்கு எவ்வளவு அர்த்தம் உண்டோ அவ்வளவே இதிலும் இருக்கிறது.

ஒழுக்கச் சட்டமே சமுதாயச் சட்டம். அது சமுதாய வாழ்க்கையின் அவசியத்திற்கேற்ப அமைய வேண்டுமேயன்றி அது மறு உலகத்திற்கு வேண்டியதில்லை. கோவிலுக்குப்போவது குறைந்ததும் அதே விகிதத்திற்குக்குற்றமும் உண்மையாகவே குறைந்த விட்ட காலமும் இருந்திருக்கிறது. வேறு ஒரு புத்தகத்தில் சேதிகள், புள்ளி விபரங்கள் முதலிய விபரங்கள் கொடுக்கப்படும். அவைகளிலிருந்து வாசகர்கள் தங்களுடைய சரியான அபிப்பிராயங்களை அமைத்துக் கொள்வார்களாக.

கிறுஸ்து மதம் ஒழிவதைப் பற்றி நாம் பேசும்போது அநேகர் அதைப் பற்றி மும்மரமாய்ச் சிந்தனை செய்கிறார்கள். நரக பயமே அதை நசிக்காமல் வைத்துக்கொண்டிருக்கிறது. மதம் என்றால் குருக்கள் ஆதிக்கம் எனத் தகும். கடவுள் உதவியின் முக்கியத்தை உயர்த்தும் பொருட்டு மதம் மனிதனுடைய சக்தியின் குறைவை பிரமாதமாய் மிகைப்படுத்திக் கூறுகிறது. கடவுள் உதவிக்குக் குருக்கள் மார்களும், பாதிரிகளும் தரகர்களாக இருக்கிறார்கள். மனித சுபாவம் அவ்வளவு கேவலமானதல்ல. அவரவர்கள் சக்தியை அவரவர்கள் தெரிந்தே இருக்கிறார்கள். அதனால் சக்தியை அளந்து கொள்ளலாம். கோவிலுக்குப் போகாத நமது அயலார்களில் அநேகர் நல்ல அறிவுடையோர்களாயிருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவர்களைக் கொண்டும் உண்மை தெரிந்துகொள்ளலாம்.

ஒழுக்க நியதியின் பொருட்டும், சமுதாய நியதியின் பொருட்டும் கிறிஸ்து மதம் நமக்கு அவசியம் இருக்க வேண்டியது தான் என்பவர்களின் நியாய வாதம் மிகவும் பலமற்றது. ஆனாலும் அதற்கான காரணங்கள் மிகப் பலமானதென்று காட்டிக்கொள்ளுகிறார்கள். நவீன நாஸ்திகத்தின் மூல காரணத்தைப்பற்றி நாம் கூறியவைகளைக் குறித்துச் சிந்தனை செய்யுங்கள். கிறிஸ்து மதக் கோட்பாடுகளை இனி ஜனங்கள் நம்பும்படி செய்ய முடியாது. நம்பிக்கை யில்லா விடத்து மதக் கோட்பாடுகள் மனிதர்களிடத்தில் என்ன உண்மையான செல்வாக்கைப் பெற்று விடும்? ஜனங்களைக் கூடுமானால் கோவிலுக்குப் போகும்படி செய்தல் ஒரு விஷயம். ஆனால் அவர்களை நரகத்திலோ, அல்லது மற்ற புராதன கொள்கைகளிலோ நம்பிக்கை கொள்ளச் செய்வது வேறு விஷயம்.

பிறகு இந் நியாயத்தின் அடிப்படை முழுவதும் பொய்யேயாகும். நாம் கோவிலுக்குப் போகாத அளவுக்கு நாம் கெட்டுப்போய் விட மாட்டோம். நாம் நாளுக்கு நாள் முன்னேற்ற மடைந்தே வருகிறோம். நான் வாசாகைங்கரியம் செய்வதாக யாரும் நினைக்க வேண்டாம், நான் ஒருவருக்கு விரோதமாக வீண் வார்த்தைகளைச் சொல்லவில்லை. நமது காலத்தைப்பற்றி உரிய காலத்தில் சரித்திர சம்பந்தமாகவும், சமுதாய சம்பந்தமாகவும் ஆராய்ச்சி செய்வோம். ஏராளமான உண்மைகளும் புள்ளி விபரங்களும் நமது நவீன முன்னேற்றத்தைப் பற்றிய சந்தேகங்களை அறவே ஒழித்து விடும். தற்காலத்தைவிட முற்காலத்தில் குற்றங்களும், பலாத்காரங்களும், அக்கிரமங்களும் உலகத்தில் அதிகமாகவே இருந்தன. முற் காலத்தவர் நம்மைவிட அதிக சுகஜீவிகளாயிருந்ததில்லை. அவைகளைப் பற்றி நாம் நிச்சயமான புள்ளி விபரங்களால் காட்டப் போகிறோம்.

கிறிஸ்தவர்கள் நாம் மடுவில் மூழ்கி இறக்கிறோம் என்று கருதுகிறார்கள். அதாவது நாம் அநீதியை வளர்க்கிறோம் என்பதாகும். இதற்கு ஆதாரமான புள்ளி விபரங்கள் ஒன்றுமில்லை. ஆகவே இந்த அபிப்பிராயம் அர்த்தமற்றது. பத்திரிகைகளில் தோன்றும் விபசார விஷயங்களையும், குற்றவிபரங்களையும் பார்த்து அத்தகைய அபிப்பிராயம் கொள்ளுகிறார்கள். ஆதி காலத்தில் இத்தகைய பத்திரிகை விளம்பர முறைகள் இருந்ததில்லையென்பதை மக்கள் மறந்து விடுகிறார்கள். ஆயினும் அக் காலத்திலும் விபசாரங்களும், குற்றங்களும் இருந்தே வந்திருக்கின்றன. அமெரிக்காவில் ஆதிப்யூரிட்டன்ஸ் என்பவர்களிடம் விபசாரம் மிகுந்திருந்ததாக ருசுப்படுத்தும் சரித்திரம் சாட்சியங்களைப் பற்றி தோழர் ரூப்பர்ட் ஹக்ஸ், "ஹால்டிமன் ஜீலியஸ் மாதப் பத்திரிகை"யில் சமீபத்தில் எழுதியிருக்கிறார். பக்குள் என்னும் பேர்போன சரித்திர ஆசிரியர் ஸ்காத்லந்து ப்யூரிட்டன்ஸ் என்பவர்களிடம் பயங்கரமான துர் நிருத்தியங்கள் இருந்தனவென்று எழுதியிருக்கிறார். அப்படியே மத்திய காலங்களிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இருந்து வந்திருக்கிறது. இவ்விஷயங்களிலும் நாம் நமது முன்னோர்களை விட அதிகமாகக் கெட்டுப்போகவில்லை. கிறிஸ்துமதம்மறைந்த பிறகு கிறிஸ்துவச் சட்டம் காப்பாற்றப்படும் என்று நினைப்பதற்கில்லை.

இனி ஒழுக்க முறைகளின் பலன்களைப் பற்றிப் பேசுவோம். இது மகா முக்கியமான விஷயம் இதனால் உலகம் பாதிக்கப்படவில்லையென இலேசாய்க் கருதப்படுகிறது.

பென் லீண்டுஸி என்னும் நீதிபதி "நவீன வாலிபர்களின் புரட்சி" என்னும் நூல் எழுதியிருக்கிறார். அவர் அமெரிக்கா வாலிபர்களின் எண்ணங்கள், நடத்தைகள் முதலியவைகளைப் பற்றி மிக நன்றாக அறிந்தவர். அவ

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

## நீ ஒரு கிறிஸ்துவனா?

### லண்டன் பகுத்தறிவு சங்க வெளியீடு.

நீ ஒரு வேளை கிருஸ்துவனென்றே உன்னை நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் "நீ கிருஸ்துவனா?" என்று நாம் கேட்பதின் தாத்பர்யம், நல்ல மனிதனாக இருக்கிறாயா? உனது குடும்பத்திலும், மற்றவர்களிடத்திலும் அன்போடிருக்கிறாயா என்பதல்ல.

ஆனால் நமது கேள்வி 'கிருஸ்து என்னும் பேரால் உள்ள சரித்திர சம்பந்தமான ஒரு மதத்தை நம்புகிறாயா? என்பதேயாகும்.'

நீ நம்புகிறாயா?

ஒரே கடவுளும், சர்வ வல்லமையுடைய தந்தையும், மேலுலகம், பூலோகம், இரண்டையும் படைத்தவரும், கண்ணால் பார்க்கக் கூடியது, கூடாதது ஆகியவைகளை (பூகம்பங்கள், வியாதிப் பூச்சிகள், கிருமிகள், கொடிய நோய்கள் உட்பட) படைத்தவருமாகிய ஒருவரை நீ நம்புகிறாயா? மேற்கண்ட தீமைகளே எங்கும் நிறைந்துள்ள இவ்வுலகமானது சர்வ வல்லமையுள்ளவரும் அன்புமயமானவருமான ஒரு கடவுளால் உண்டாக்கப்பட்டது என்பதை நம்புகிறாயா?

நினைத்துப்பார்! ஒரு வேளை

(1) கடவுளானவர், பூகம்பங்கள், வியாதிப்பூச்சிகள், கிருமிகள், கொடிய நோய்கள் இல்லாத ஓர் உலகத்தை உண்டாக்க விரும்பினர்; ஆனால் அவரால் முடியவில்லை—அப்படியானால் அவர் சர்வ வல்லமையுடையவரல்ல.

அல்லது

(2) கடவுளானவர் இந்தக்கொடுமைகள் இல்லாத ஓர் உலகத்தை சிருஷ்டித்திருக்க முடியும்; ஆனால் அவருக்கு இஷ்டமில்லை—அப்படியானால் அவர் தயாபரரல்ல.

அல்லது

(3) கடவுளால் அவ்விதமான உலகத்தை சிருஷ்டித்திருக்கவும் முடியாது; அவருக்கு இஷ்டமுமில்லை: அப்படியானால் அவர் சர்வ வல்லமையுடையவருமல்ல; தயாபரருமல்ல.

அல்லது

(4) கடவுளுக்கு அவ்விதமான உலகத்தை சிருஷ்டி செய்யவும் முடியும்; அப்படியானால் அவர் ஏன் செய்யவில்லை?

நீ நம்புகிறாயா?

"கடவுளுக்குப் பிறந்த ஒரே குமாரனான ஏசு கிருஸ்துவை" நீ நம்புகிறாயா? அப்படியானால் அதற்கு அர்த்தமென்ன?

ஒரு வேளை மனிதனைப் பற்றிய (கடவுள் விஷயம் இருக்கட்டும்) தகப்பன் தன்மை (Paternity என்பதற்கு முந்தி ஏசு கிருஸ்து கடவுளின் குமாரன் என்று கற்பிக்கப்பட்டிருப்பாய்: ஆதலால் தான் நீ அதைப்பற்றி சிரமம் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் இப்போது உனக்குத் தெரியும்—தகப்பன் யார் என்றும், பிள்ளை யார் என்றும்—ஆகையால் இப்போது சொல் "ஏசு கிருஸ்து கடவுளின் ஒரே குமாரன்" என்பதற்கு அர்த்தம் என்ன என்பதை! இந்த அர்த்தமற்ற சொற்களுக்கு, அர்த்தம் சொல்லக்கூடுமானால் நீ சர்ச்சுகளிலுள்ள எல்லா பத்திரிகைகளையும் விட, ஆலோசனை சபையைவிடக் கெட்டிக்காரனாவாய்.

நீ நம்புகிறாயா?

ஏசு கிருஸ்துவானவர் நமக்காகவும், மேலுலகத்திலிருந்து வந்தார் என்பதையும், கன்னி மேரியின்பரிசுத்த ஆத்மாவினால் அவதாரமானார் என்பதையும், நம் பொருட்டு பாண்டியஸ் பைலேட்டின் கீழ்ச் சிலுவையில் அறையப்பட்டார் என்பதையும்" நீ நம்புகிறாயா? அதாவது தந்தையாகிய கடவுள் ஜனங்கள் பாவம் செய்வார்களென்று தெரிந்திருந்தும், அவர்கள் மீது கோபங்கொண்டு, அவர்கள் எல்லோரையும் நரகத் தீயில் என்றென்றும், கஷ்டமனுபவிக்கும்படியான தண்டனையை விதித்துப் பிறகு தோன்றின யோசனைப்படி, தன்னுடைய சொந்தக் குமாரன் அவர்களுக்காகப் பழியேற்றுஉயிரைத் தியாகம் செய்ததை உத்தேசித்து, அவர்களில் சிலரை மாத்திரம் விடுதலை செய்ததையும் நீ நம்புகிறாயா?

"சிலுவையில் அறையப்பட்ட பிறகு, மூன்றும் நாம் எழுந்து மோட்சலோகத்துக்கு ஏறிப் போனார்" என்பதையும் நீ நம்புகிறாயா?

அப்படியானால் உனது பைபிளை எடுத்து, மாத்யூ 28ம் அதிகாரத்தையும், மார்க் 16-ஐயும் லூக்கா 24-ஐயும், ஜான் 20, 21-ஐயும், கவனமாகப் படித்துப்பார். பிறகு எப்போது இறந்த இடத்திலிருந்து ஏசுகிருஸ்து எழுந்தார் என்பதையும், முதன் முதலில் யார் அவரைப்பார்த்தார் என்பதையும், எங்கே பார்த்தார்கள் என்பதையும், யாரிடத்தில் சொன்னார்கள் என்பதையும், நடை முறைகளின்வரிசைக்கிரமப்படி சரியாக எழுதிப்பார். இதுவரையில் உனக்கு சந்தேகம் தோன்றாதிருந்தால் இனிமேல்தோன்ற ஆரம்பிக்கும்.

நீ இதில் நம்பவில்லையா?

அப்படியானால் நீ ஒரு நல்ல மனிதனாகவும், பிறரிடத்தில் அன்புடையவனாகவும், இருப்பதாக அநுத்தம். ஆனால் நீ ஒரு கிருஸ்துவனல்ல. எந்த அர்த்தத்திலென்றால் நல்ல ஒழுக்கத்திற்கு சிறிதும் சம்பந்தமில்லாததும், ஒன்றுக்கொன்று முரணானதும் தீய ஒழுக்கத்தைப் போதிப்பதுமாகிய, இத்தகைய விஷயங்களை நம்புகிற ஒரு கிருஸ்துவன் ஆகமாட்டாய். உன்னையறியாமலே நீ ஓர் அறிவியக்கவாதி (Rationlist) யாகிவிட்டாய். இன்னும் நன்றாகத் தெரிய வேண்டுமானால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள துண்டு நோட்டீசுகளும், புத்தகங்களும், The Secretary, The Rationlist Press Associatiou Nos. 4—6 Johnson' s Court, Fleet Street, London. E C. 4என்ற விலாசத்துக்காவது அல்லது உனது ஊரிலுள்ள சுயமரியாதைச்சங்கத்துக்காவது எழுதித்தெரிந்துகொள். (Robert Arch) மதுரை சுயமரியாதைச்சங்கத்தார் மொழிபெயர்த்தது.

## ரஷியப்பெண்கள்

### சில புள்ளி விபரங்கள்.

(C. R. D)

1933-ம் வருட முடிவில் வெளிவந்த புள்ளி விபரங்கள்:—

கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் மொத்தப் பெண்கள்—70,00,000 அதாவது தொழில் செய்யும் மொத்தப்பெண்களில் 100-க்கு 38 பேர் கைத்தொழிலாளர் அநேகர் ஆலைகளில் இயந்திரம் ஓட்டுகிறார்கள். மற்றும் பலர் டிராம், பஸ் ஓட்டிகளாக வேலை பார்க்கின்றனர். மண்வெட்டி, கட்டப்பாரை முதலிய ஆயுதங்களைக்கொண்டு கட்டிட வேலையில் அமர்ந்திருக்கும் பெண்களும் அநேகர். சுருங்கக் கூறின் ஆண்கள் என்னென்ன வேலைகள் செய்கிறார்களோ அவற்றை எல்லாம் பெண்களும் செய்கின்றனர்.

கைத்தொழில் ஈடுபட்டிருக்கும் 70, லட்சம் பெண்களைத்தவிர, பத்து லட்சக் கணக்கான பெண்கள் ஆபீஸ் வேலைகளிலும், உபாத்தியாயர், நர்ஸ், இஞ்சினீர் வேலைகளிலும் அமர்ந்துள்ளார்கள்.

கூட்டுப்பண்ணைத் தொழிலாளர்களில் ஆண்களை விட பெண்களே அதிகமாயிருக்கின்றனர்.

1933-ம் வருட ஆரம்பத்தில் 6000 பெண்கள் பண்ணைத் தலைவிகளாய் இருந்திருக்கிறார்கள். அதே வருடம் 60,000 பெண்கள் அப்பண்ணைகளின் நிர்வாக மெம்பர்களாக இருந்திருக்கின்றனர்.

ஜில்லா, மாகாண சோவியத்து அரசாங்க நிர்வாகங்களில் பெண்களுக்குப் போதுமான அளவு பங்கு கிடைக்கவில்லை என அறிந்த மத்திய அரசாங்கம் கீழ்க்கண்ட அறிக்கையைப் பிரசுரித்திருக்கிறது:—

"பெண்களை, அரசியல் சமூக இயல்களில் உயர்த்த வேண்டுமென்பது சோவியத்ஆட்சியின் முக்கிய லட்சியங்களில் ஒன்றாகும். அடுத்த தேர்தல்கள் பெண்களை பொருப்பு வாய்ந்த ஸ்தானங்களுக்கு அனுப்புவதை முக்யமாகக் கொள்ள வேண்டும். மனித சமூகத்திற்கான எல்லாத் துறைகளிலும் ஆணைப்போலவே பெண்ணிற்கும் வேலை செய்யப் பூரண உரிமையுண்டு பேவிஸம் பெண்களை அடுப்பூதும் வேலைக்கும், பிள்ளை பெறும் வேலைக்கும் கொண்டு போகிறது. சோஷியலிசம் அவ்வாறின்றி மனிதப் புது வாழ்வு வேலையில் சலிப்பின்றி உழைக்கும் வீரர்களாக பெண்கள்வரவேண்டுமென அழைக்கிறது."

## பரதூர் வாலிபர் சுயமரியாதைச் சங்கம்.

சிதம்பரம் தாலுகா பரதூர் வாலிப சுயமரியாதை சங்கக் கூட்டம் 16-12-34 மாலை 4 30 க்கு கூடிற்று. தலைவர் எஸ். ஷண்முகசுந்திரம் அவர்கள் தலைமை வகித்தார்கள் பி. டி. ஜி. ராஜன் அவர்களால் சங்கசம்மந்தமாய் நடத்தரிபோர்ட்டுபடிக்கப்பெற்றன.

பாவாடை, வீரப்பன். ரெங்கசாமி தாமோதரன் இவர்களால் சுயமரியாதைப்பாடல்கள்நன்குபாடப்பெற்றது பின் ராஜன் அவர்களால் சமூக சீர்திருத்த விஷயமாய் சில விஷயங்கள் சொல்லப்பட்டன.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

(1) நமது இயக்கத் தலைவர் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களை 15-1-35ந்தேதி நடைபெறும் நமது சங்க ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்துநடத்திக் கொடுக்கும்படி இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(2) நமது மாகாண மகாநாட்டை சீக்கிரத்தில் கூட்டி நமது வேலைத்திட்டத்தை ஒரு முடிவு செய்து நமது இயக்கத்தைப் பரவச் செய்ய வேண்டுமென்று நமது தலைவரவர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது என்றும் இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேறிய பின் கூட்டம் கலைந்தது என சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

## வாலாஜாபாத் மெய்கண்டார் மாணவர் கழக ஆண்டுவிழா.

வாலஜாபாத் இந்துமத பாடசாலையின் மெய்கண்டார் மாணவர்கழகத்தின் பதினைாவது ஆண்டுவிழா 13-12-34 ந்தேதி வியாழக்கிழமை மாலை 4மணிக்கு ஆரம்பப்பாடசாலைகளின் பார்வை யதிகாரி தோழர் டி. கிருஷ்ணமாச்சாரியார் எம். ஏ. எல். டி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆண்டு விழா அறிக்கை படிக்கப்பட்டது. தலைவர் முடிவுரையில் சில அறிய விஷயங்களைப்பற்றிப்பேசினர். பின் நிகழ்ச்சிக்குறிப்பில் கண்டபடி மாணவர்கள் நடிப்பு, பேச்சு, கட்டுரைப் போட்டி முதலியவைகள் நடைபெற்றது. வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது. இன்னிசைக்கருவிகளுடன் சிலமாணவர்கள் பாடினர்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் விழா முடிந்தது. தேநீர் விருந்தும், புகைப்படமும் எடுக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

# ரஷியாவின் பரிசீலனை.

## மதம் விரட்டப்பட்டது

## இந்தியாவிற்குப் பாடம்.

## புரபசர் முக்கர்ஜீ உபன்யாசம்

(C. R. D..)

ஆந்திரா யூனிவர் சிடியில் சரித்திர அரசியல் பொருளாதாரப் பகுதிகளில் பண்டிதராயிருக்கும் எச். என். முக்கர்ஜி என்பவர் சென்ற மாதம் 25ம் தேதி மாலை விசாகப்பட்டணம், விக்டோரியாஜூபிளி டவுன் ஹாலில், பண்டிதர் எம். வெங்கட ரங்கையா அவர்களின் தலைமையில் "ரஷியாவின் பரிசீலனை" என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழி வாற்றினர். தோழர் முக்கர்ஜியை கூட்டத்திற்கு அறிமுகப்படுத்தும் முறையில் தலைவர் கூறியதாவது:—

"இன்றைய விஷயமான" "ரஷியாவின் பரிசீலனை" என்பதைப் பற்றி பேச நம எல்லோரையும் விட நமது தோழர் முக்கர்ஜி பூரண அருகதையும், யோககியதையும் உடையவராவார், காரணம் அவர் அரசியல் பொருளாதார விஷயங்களில் பாண்டித்யம் பெற்றவர். பண்டிதராயுமிருப்பவர். ஆதலின் நுண்ணிய ஆராய்ச்சியுண்டு. மேலும் அவர் தன்னுடைய ஐரோப்பிய சுற்றுப் பிரயாணத்தின்போது ஒவ்வொரு நாட்டையும் பிரத்தியக்ஷமாய்க் கண்டுவந்துள்ளவர்." என்று கூறி தோழர் முக்கர்ஜியை பேசுமாறு கேட்டுக்கொண்டார்.

பிறகு தோழர் முக்கர்ஜி எழுந்து ரஷியாவைப் பற்றிப் பேச தனக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்ததற்காக சங்கத்தினருக்கு தனது வந்தனத்தைத் தெரிவித்த பிறகு பிரசங்கத்தைத் துவக்கினர். பிரசங்கத்தின் சாரம் பின் வருமாறு:—

"இன்று நான் பேச எடுத்துக் கொண்ட விஷயம் மிகவும் முக்கியமானதாகும். அதோடு விஷய ஞானம் நிறைந்ததுமாகும். கடந்த 7ந் தேதி (நவம்பர் மாதம்) யன்று சோவியத் ரஷியா தனது குடியரசு ஸ்தாபித்த 17வது வருடக் கொண்டாட்டத்தைக் கொண்டாடியிருப்பது. உங்களுக்குத் தெரிய வந்திருக்கும். பொருளாதாரத்தை தேசியப் பிரச்சினையாக்க வேண்டியதின் அவசியத்தை ரஷியா கண்டு அதன் படியேஒருதிட்டத்தைத்தயாரித்தது. அதை வெறும் ஏட்டளவில் நிறுத்தி விடாமல் மக்களின் தினசரி வாழ்வில் பிரயோகித்து அந்த திட்டத்தை அனுபவ சாத்தியமாக்கி யிருக்கிறது.

மேற் கூறிய தேசியப் பொருளாதார திட்டத்தில் ஒரு முக்யாம்சம் அடங்கியுள்ளது. அந்த முக்யாம்சம் யாதெனின் அது தான் மனித சமூகத்திற்கு அத்யாவஸ்யமான ஓர் புதிய வாழ்க்கைத் தத்துவமாகும். இன்று உலக மக்களின் கவனத்தை ரஷியப் பொருளாதாரத் திட்டம் இழுத்து நிற்கின்ற ரகசியம் அத்திட்டத்தில் அடங்கியுள்ள டை வாழ்க்கைத் தத்துவமே"

"மக்களின் பசிப்பிணி, மூப்பு, துன்பங்களுக்கு பொருளாதார சமத்துவமின்மையே காரணம். ஒரு நாட்டு மக்களனைவோருக்கும் அந் நாட்டுப் பொருள்கள் சொந்தம். அப்பொருள்களில் எல்லா மக்களுக்கும் பங்குண்டு என்னும் சித்தாந்தத்தை காரல் மார்க்ஸ் என்பவர் முதன் முதலில் எடுத்துக் கூறினர். பொருளாதார சமத்துவத்துவம் சாத்தியமானது என்று அவர் கூறியிருப்பதோடு அதற்கான சகல முறைகளையும் எடுத்துக்காட்டியிருக்கிறார். உலகத்தில் இருக்கும்பொருளாதாரதிட்டங்களில் இது ஒருநூதன திட்டமாக இருக்கவே உலக மக்கள் அனைவரும் இதை ஆச்சரியத்துடன் கவனிக்கின்றனர். காரல் மார்க்ஸின் திட்டப்படியும், முறைப்படியும் பொருளாதார சமத்துவத்தை அனுபவத்திற்குக் கொண்டுவருவது மிகவும் எளிதாயிருந்த போதிலும் அதன்படி பரீக்ஷித்துப் பார்க்க ஒருவரும் முன் வரவில்லை. காரல் மார்க்ஸினுடைய காலத்திலிருந்து பொருளாதாரத் துறையில் ஒரு புதிய வாழ்க்கைத் தத்துவம் தோன்றி அது உலக மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்த போதிலும் அதைப் பரிசீலனை செய்து பார்க்க எவரும் துணியவில்லை. அதன் பிறகு முதன் முதலாக காரல் மார்க்ஸின் பொருளாதார சமத்துவக் கொள்கையை ரஷியா பரிசீலனை செய்து பாாக்கத்துணிந்து வந்திருக்கிறது. பரிசீலனை நடந்து வருகிறது. ஆகவே உலக மக்களின் பார்வை ரஷியாவை நோக்கி நிற்கின்றது.

"ரஷியாவின் பொருளாதார சமத்துவப் பரீக்ஷையைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமானல் நாம் 1917 வரிடம் மார்ச்சு மாதம் ரஷியாவில் கிளம்பிய போல்ஷ்விக் புரட்சியிலிருந்து ஆராயவேண்டியதவசியம். போல்ஷ்விக் புரட்சி கிளம்பிய அதே வருஷத்தின் கடைசியில்கெரன்ஸ்கி புரட்சி என்ற மற்றொரு புரட்சியும் கிளம்பிற்று. ஆனல் அது வெற்றி பெறவில்லை. காரணம் ஜனங்கள் யுத்தங்களில் ஈடுபட்டு அலுத்துவிட்டனர்.

"யுத்த ஆரம்பத்திற்கு முன்பிருந்தே கொடுங்கோல் மன்னன் ஜாரின் பலமும்,செல்வாக்கும் சிறிது சிறிதாகத் தேய்ந்து கடைசி நிலைமையை அடைந்து விட்டது. யுத்தத்தின் போது பின்னும் கேவல நிலைக்கு வந்து விட்டது. பிறகு 1917ல் அரசனுடை சேனையிலிருந்து பத்து லக்ஷக்கணக்கான போர் வீரர்கள் அரசனையே எதிர்க்கத் தலைப்பட்டு விட்டதால் அரசன் தன்னுடைய ராணுவத்தையே தான் நம்ப முடியாமல் போய் விட்டது.

### கெரன்ஸ்கி அரசாட்சி.

"உலக மிதவாதக் கக்ஷி (வெளவால் கக்ஷி)களின் பெருவாரியான ஆதரவைப் பெற்ற கொரன்ஸ்கி அரசாங்கம் அதிகாரம் பெற்று அரசு செய்யத் தலைப்பட்டது. அந்த அரசாங்கத்திற்கு முதலாளிகளும், பணக்காரர்களும் தூண்களாய் இருந்தமையால், அது ஏழை விவசாயிகளுக்கு என் மூக்கத்தனை உபகாரமும் செய்யமனமிசையவில்லை.அவர்களின் கூக்குரலை அலக்ஷியப்படுத்தியது. ஆகவே, அத்தகைய அரசாங்கம் ஒழிக்கப்பட்டு விட்டது."

"1917ம் வருடம் அக்டோபர் மாதம் போல்ஷ்விக்காரர்கள் அரசாங்கத்தைக் கைப் பற்றினர்கள். அதிகாரம் பெற்ற உடனே அவர்கள் உலகந் தோன்றிய நாள் முதல், ஜார் அரசன் காலம் வரையில் முளைத்து, வளர்ந்து, பட்டு, அழுகிக் கிடந்த—மனித சமூகத்தை மாய்த்து வந்த கொடிய மூடப் பழக்க வழக்கங்களை குழி தோண்டிப் புதைப்பதையே தங்கள் முதல் வேலையாகக் கொண்டு முனைந்தார். அதிலும் தங்களின் முக்கிய கவனத்தை பொது நிலத்தைச் சொந்தம் பாராட்டும் தன்மையை ஒழிப்பதிலும் பழைய விவசாய முறைகளை ஒழித்து புதிய முறைகளைக் கொள்ளுவதிலும் செலுத்தினர். எனவே, அழிவு வேலையையே தங்களின் முதல் வேலையாகக்கொண்டனர். ஓர்இடத்தைச் சுத்தப்படுத்த வேண்டுமானல் அந்த இடத்தில் ஏற்கனவே அழுகி நாற்றமெடுத்துக் கிடக்கும் அசுத்தங்களை அப்புறப்படுத்தி அழிப்பது முதல் வேலையும், முக்கியமான வேலையுமாகிறது. அசுத்தம் எங்கில்லையோ அங்கு சுத்தம் காணும் என்பது யாவருமறிந்ததாலின் வீரர் லெனின் அழிவு வேலையை முதன்மையாகக் கொண்டார்.

புதியன புகவேண்டுமானல் பழையன கழிந்தாக வேண்டுமன்றோ? சமூகத்தைப் புதுமாதிரியாக அமைக்கவேண்டிய அவசியத்தின் பொருட்டு உண்டான இரண்டாவது புரட்சிக்கு அழிவுவேலை, இன்றியமையாததாகத் தோன்றியது. அதன் பயனக பரம்பரைப்பிரபுத்வம், பட்டம், நிலங்களை சொந்தம் பராட்டும் கொள்கை யாவும் ஓட்டம் பிடிக்க வேண்டியதாயிற்று.

"பொதுவுடமை அரசாங்கம் தன்னுடைய முதல் வேலையான அழிவு வேலையை ஒருவாறு செய்து முடிக்க ஒருவருட காலம் பிடித்தது. 1918 வருட முடிவு வரைஅழிவுவேலை நடந்துபோதுமான வெற்றியளித்தது. அழிவு வேலையில் ஈடுபட்டவுடனே ஆங்காங்கு கலகங்கள், உள்நாட்டுச் சண்டைகள் போன்ற பல தொல்லைகளை அரசாங்கம் சாமாளிக்க வேண்டியதாயிற்று. இவ்விதத்தொல்லைகளுக்குக்காரணம். "வெள்ளை ரஷியர்" என்ற முதலாளிக்கூட்டத்தாராகும். அவர்கள் தொழிலாளரை நசுக்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு கலகங்கள் செய்துபார்த்தோடு அவர்களின் செயலுக்கு ஐரோப்பிய அரசாங்கங்களின் உதவியையும் பெற்றனர். போல்ஷ்விக் அரசாங்கத்தாரிடம் இது பலிக்கவில்லை. போல்ஷ்விக் அரசாங்கம் மிகவும் கடுமையான முறைகளைக் கையாளா வேண்டியதாயிற்று.

நகரத் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் தங்கள் ஜீவனத்திற்காகக் குறிப்பிட்ட அளவு பொருள் கொடுத்தாக வேண்டுமென வலியுறுத்தியதோடு, பூமியில் விளையும் பொருள் அனைத்தும் தன் வசப்படுத்தியது. இவ்வித முறையை மூன்றுவருடம் கையாண்ட பிறகும், நாட்டில் அமைதியும், சாந்தமும் இல்லாததைக் கண்ட லெனின் இவ்விதவேலை முறை தாங்கள் எதிர்பார்த்த நிலைமைக்கு நேர்மாறான நிலைமையை ஏற்படுத்தி விடக் கூடுமென யூகித்து 1921ல் ஒரு புது மாதிரியான பொருளாதார வேலைத்திட்டத்தைப்புகுத்தினர். ரஷியப் புரட்சிச்சரிதையில் இந்த (1921ல்வகுத்த பொருளாதாரத்திட்டம்) ஒரு புதிய சாகாப்தத்தைத்துவக்குகின்றது. டை வேலைத்திட்டமும் நிரந்தரமானதல்ல. பரீக்ஷார்த்தமாகவே கொண்டுவரப்பட்டதாகும.

' ஆகவே1921ல்ஒருசமதர்மஅரசாங்கம் சிருஷ்டிக்கப்பட்டது. வேலைப்பாடுகள்வகுக்கப்பட்டன. அதில்முதலாளிகளுக்கு சிறிதளவு சலுகையும்காட்டியிருக்கிறது. இவ்விதச்சலுகை பொதுவுடமைக் கொள்கைக்கு பிற்போக்கை அளிப்பதாய் இருந்தாலும் அவ்விதம் கொடுக்கவேண்டியதின் அவசியம் லெனினுக்கு ஏற்பட்டது. காரணம், ஒரு அடி பின்னுக்குப் போவதனல் இரண்டடி முன்னல் ஏற சௌகரியமிருக்கிறது. என உணர்ந்தே லெனின் அவ்விதம் செய்தார். இரண்டடி முன்னல்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க,

# கோலக்கங்சார் தமிழர் சீர்திருத்த 4-வது மகாநாடு.

## முதல் மகாநாடு ஈ. வெ. ராமசாமியால் திறந்து வைக்கப்பட்டது.

## சங்கக்கட்டிடத் திறப்புவிழா—பாடசாலை ஆண்டு விழா—யுவர் மகாநாடு.

1-12-34ந் தேதியில் மலாய் நாட்டில் பேரா மாகாணத்தைச் சேர்ந்த கோலக்கங்சார் தமிழர் சீர்திருத்த சங்க ஆரம்பவிழா நடந்தது.

அவ்வைபவத்துக்கு ஹானரபில் மிஸ்டர் H. H. அப்துல் காதர் (தொடுவாய்ச்சட்ட இந்தியப் பிரதிநிதி) அவர்களைத் தலைமை வகிக்குமாறு தைப்பிங் தோழர் வி. கே முருகேசம்பிள்ளையவர்கள் பிரேரபிக்கப்பெருத்தகரகோஷத்தினிடையே கனம் H. H. அப்துல் காதர் அவர்கள் அக்கிராசனம் வகித்து ஆசனத்தில் அமர்ந்தார்.

முன்னுரை சொற்பொழிவாற்றினார்கள். அதன் சாராம்சம்பின் வருமாறு:—

மாட்சிமை தங்கிய மன்னரவர்களே சீமாட்டிகளே! சீமான்களே!! இந் நான்காம்மஹாநாடானது, மாட்சிமை மிக்க மன்னர் அவர்களின் போஷணையின் கீழ் நடைபெறுவதானது மிகுந்த முக்கியாம்சத்தைத் தெரிவிக்கிறது.

பல மஹாநாடுகளிலும் பொதுக்கூட்டங்களிலும் சீர்திருத்தக்கொள்கைகளை போதிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் கோலக்கங்சார் தமிழ் மக்களால் கட்டப்பட்ட அழகிய கட்டிடத்தைத் திறந்து வைக்கும் விழாவிற்குத் தலைமை பூணவும் எனக்குக்கிடைத்தது ஓர் பாக்கியமென்று எண்ணுகிறேன். இம் மலாய் நாட்டின் பல நகரங்களில் ஆக்காங்கு இத்தகைய பல (சீர்திருத்த சங்கக்) கட்டிடங்கள் சமீபத்தில் கட்டப்படுமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இதை இங்குவதியும் மாட்சிமை தங்கிய பேரா மன்னர் சர் ஆலாங் இஸ்கந்தர்ஷா, G. C. M. G, K. C. V. O. அவர்கள் மிகப்பரிவுடன் திறந்து வைத்துள்ளார்கள். இம்மஹாநாடானது தமிழ் பாஷையின் பேரால் ஏற்பட்டிருக்கிறது. இம்மஹாநாடு, ஜாதி சமய வேறுபாடுகளின்றி இம்மலாய் தீபகற்பத்தில் வதியும் தமிழ் மக்களின் பூரண ஆதரவைப் பெறுமென்று நம்புகிறேன்.

இவ்வுயரிய காரியத்தின்நற்கியாதிகள் முன்பு நடைபெற்ற அ. ம. க. சீ. மகாநாடுகளுக்குரியனவாகும் ஆயினும் தற்சமயமுள்ள நிலையான நற்பெயரானது சில வருடங்களுக்கு முன் விதைத்த சீர்திருத்த விதையின் பலனைக் கிடைக்கப்பெற்ற முதற்பயனையடைந்துள்ள இக்கோலக்கங்சார் தமிழர்களுக்கே யுரியதாகும். இவர்களின் உதாரணத்தை மலாய்நாட்டின் தமிழ் மக்கள் பின்பற்றுவார்களென்று நம்புகிறேன்.

மத விஷயத்தில் புகாமல் சமூக சீர்திருத்தத்தில் பாடுபட்டுழைக்க வேண்டுமென்பது ஒரு எச்சரிக்கையாகும்.

இம்மஹாநாடு எல்லாத்துறைகளிலும் வெற்றி பெற்று மிளிர வேண்டுமென்பதே எனது விருப்பமாகும்.

மகாநாடு பன்னெடுங்காலம் தொடர்ந்து நடைபெறவும், இதன் அங்கத்தினர்களுக்குள் பிளவு நேராமலிருக்கவும் நான் விரும்புகிறேன்.

தலைவரவர்கள் முன்னுரைக்குப் பிறகு ஆசனமமர்ந்தார். பின்னர் பினாங்கில் பிரபல தனவந்த வர்த்தகர் ஜனாப் S. E. S. மூஹம்மது இஸ்மாயில் அவர்கள் தமிழ் உபசாரப்பத்திரத்தை வாசித்துக் கொடுத்தார்கள்.

பிறகு மலாய் பாஷையில் அச்சியற்றப்பெற்ற உபசாரப்பத்திரமொன்று ஆலிஜனாப் எஸ். அமீன் சாயபு ஜே. பி. அவர்களால் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

இது முடிந்தவுடன்பினாங்கு முஸ்லிம்மஹாஜனசபா வைஸ்பிரஸிடெண்ட் ஆலிஜனாப் இ. பி. முகும்மது நூர்தீன் அவர்கள் மாட்சிமைமிக்கமன்னர் அவர்களுக்கு புஷ்பஹாரம் சூட்டினார்கள்.

அகிலமலாயர் தமிழர் சீர்திருத்த நான்காம் மஹா நாட்டின் கௌரவ பொதுக்காரிய தரிசியாகிய சுவாமி அற்புதானந்தா அவர்களால் ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

மாட்சிமை மிக்க் மன்னர் அவர்கள் இதற்குப் பதில் கூறுமுகத்தான் தம் தாய் பாஷையில் சில வார்த்தைகள் பேசியதில், தம்மைக் கௌரவித்த தமிழ் மக்களுக்கு நன்றி செலுத்தி, அவர்களைசாதிசமயம், வேறுபாடுகளின்றியும் பாரபக்ஷமில்லாமலும் பராமரித்து வருவதாகவும் தமிழ் கல்விக்குத் தன்னலான உதவியைச் செய்தளிப்பதாகவும் கூறினார். இறுதியாகத் தலைவரவர்களின் அழகிய முடிவுரைக்குப் பின் கொட்ட கையில் கேக் முதலிய சிற்றுண்டிகளும், தேநீர் பானமும் வழக்கப்பட்டு, வரவேற்புக்கமிட்டியின் வந்தனோபசாரத்திற்குப் பின் கூட்டம் இனிது கலைந்தது., மீண்டும் மணி 6-க்கு, ஷை சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் தமிழ்பள்ளிக்கூடமுதல் வருடாந்தர விழாவை முன்னிட்டுக் கூட்டம் கூடலாகியது.

### கோலக்கங்சார் தமிழர் சீர்திருத்த சங்கத் தமிழ் பாடசாலை. முதல் வருடாந்தர விழா.

### உயர் திரு ஜி. சாமிப்பிள்ளை அவர்களின் தலைமைப் பேருரை.

மணி 6-க்கு பள்ளிக்கூட வருட விழா ஆரம்பிக்கப் பெற்றது. பள்ளிக்கூடமாணவர்களுக்கு ஆசி கூறப்பட்டதும், சுவாமி அற்புதானந்தா அவர்கள் பினாங்கு சாதுக்கள் மடாலய அதிபதி ஜி. சாமி பிள்ளையவர்களைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக் கொண்டார். தலைவரவர்கள், பெருத்த கரகோஷத்தினிடையே ஆசனமமர்ந்தார். வரவேற்புக் கமிட்டியாரால் தலைவருக்குப் புஷ்பஹாரணம் சூட்டப்பட்டது பின்னர் தலைவர் அவர்கள் முகவுரையில் கீழ்காணும் சொற்பெருக்கையாற்றினார்கள். அதன்சுருக்கம்.

#### தலைவர் உரை.

சகோதர சகோதரிகளே!

என்னையுமோர் பொருட்படுத்தி ஆக்கிராசனம் வகிக்கச் செய்ததற்காகவரவேற்புக் கமிட்டியாருக்கு நன்றி பாராட்டுகிறேன்,

இந்தக் கலாசாலை நாளடைவில் அபிவிர்த்தி யடைய விரும்புகிறேன். இவ்விதமே பினாங்கிலும் பள்ளிக்கூடங்கள் நடைபெறுகின்றன. அதற்காகவும் சந்தோஷப் படுகிறேன்.

#### தமிழன் மேன்மை.

உலகத்திலுள்ள பாஷைகளெல்லாம் அநேகமாக அந்தந்த ஊரின் பெயரைக்கொண்டு வழங்கிவருகிறது. ஆனல் தமிழ் பாஷை அவ்விதமாக வழங்கி வரவில்லை. தமிழ் என்பது இனிமை யென்னும் பொருள் கொண்ட காரணப்பெயராவதே தமிழின் மகத்துவத்திற்கு ஓர் நற்சான்றாகும். அதோடு குரலொலிக்குரிய சுவையிலும், குணத்திலும் மற்ற பாஷைகளைப்பார்க்கிலும்இயற்கையால் இனிமையானதாகவும் இன்னிசையான தாகவும் சாத்வீகம் பொருந்தியதாகவுமிருக்கிறது. செந்தமிழ பாஷையினும் மிக்க புராதனமானதும், தேர்ச்சியடைந்தும் உயர்தரமானதுமாகிய பாஷை இந்நிலவுலகின் கண் எங்கேனுமில்லை,

தமிழன் பெருமையைச் சொல்லவேண்டுமானல் புலமை மிக்கவாய்ந்த பண்டித சிரோன் மணிகளாகிய திரு மாக்ஸ் முல்லர் (Max Muller, டாக்டர் போப் (G. U. Pope) ஆகியோர் செந்தமிழ் மகத்துவத்தைப்பற்றிக் காலத்துக்காலம் வெளியீடு செய்த அபிப்பிராயம்மாத்திரமேஎம்மவர்க்கும், மற்றச்சாதியாருக்கும் தமிழ்ப் பாஷையில் எவ்வளவு அரும்பொருள்கள் புதைந்து கிடக்கின்றதென்பதை தெரிவிப்பதற்கு போதுமானதாகும். செந்தமிழ்க்கலாசாலை விஷயமாக கோலக்கங்சார் தமிழர் சீர்திருத்த சங்கத்தாரும் இதுகாறும் எடுத்த முயற்சியே ஓர் வழி காட்டியாக வைத்து மற்றும் மலாயாவிலுள்ள ஒவ்வொரு நகரங்களிலும் கலாசாலைகளை ஸ்தாபனம் செய்வது எம்மவர் எல்லோருடைய கடனாகும்! என்று கூறினர்.

#### மானேஜர் ரிப்போர்ட்

பிறகு பள்ளிக்கூட மானேஜர் தோழர் ஏ. ரெத்தினசாமியவர்கள் ரிப்போர்ட் வாசிக்கையில் ஆங்கில பாஷையில் பின் கண்ட விஷயங்களைக் குறிப்பிட்டார்:—

மேற்குறித்த பள்ளிக்கூடம் 1932-ம் வருடத்தில் மிகுந்த பொருளாதார நெருக்கடியுடன் ஆரம்பிக்கப் பட்டதென்றும், ஏழைச்சிறுர்களுக்கு இலவசத்தமிழ்க் கல்வியூட்ட வேண்டுமென்னும் நோக்குடன் இது நிறுவப்பட்டதென்றும் பள்ளியில் உபாத்தியாயர் தக்க திறமைசாலிகளென்றும், இதைத் தொடர்ந்து நடத்தி வர எல்லா கனவான்களும் தம்மாலியன்ற பொருளுதவியைச் செய்ய வேண்டுமென்றும் துவக்கத்தில் 22 பிள்ளைகள் சேர்ந்து வாசித்தனர் என்றும், தற்சமயம் சுமார் 40 பிள்ளைகளுக்கதிகமாக உள்ளார்களென்றும், நாளடைவில் பிள்ளைகள் அதிகமாகச் சேருமாகையால் கட்டிடத்தையும், விசாலப்படுத்த வேண்டுமென்றும், பள்ளிக்கூட அதிகாரிகளும், இதர பல பெரியார்களும் விஜயம் செய்ததில் உபாத்தியாயரின் திறமையை மெச்சி விஸிட்டர்களின் புத்தகத்தில் தங்கள் சொந்தக் கருத்துக்களை எழுதிப்போயுள்ளனர் (அவைகளில் ஒரு சில வாசிக்கப்பட்டன. யாவும் ஒழுங்கான நற்சாக்ஷிப் பத்திரங்களாகும்) என்றும் இக்கலாசாலையின் உற்பத்திக்குக் காரண பூதர்களாக, சுவாமி அற்புதானந்தா, தோழர்கள் கே. நாகேசு, ஐயாசாமி, ராமலிங்கம் முதலியவர்களாகுமென்றும் குறிப்பிட்டார்.

#### ஆசிரியர் ரிப்போர்ட்.

பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் கனம் கே. சரவணமுத்து அவர்கள் தமது தமிழ் ரிப்போர்ட்டை வாசித்தார் பிறகு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்க தோழர்

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

# விருதுநகரில் காலித்தனம்.

காங்கிரஸ் பிரமுகர்கள் விருது நகர் சென்றிருந்த சமயம் ஊர்வலத்தில் செருப்பு வீசி எறியப்பட்டதாகவும், பொதுக்கூட்டத்தில் கற்கள் வீசி எறியப்பட்டதாகவும் தமிழ்நாடு, ஜஸ்டிஸ் முதலிய பத்திரிக்கைகளில் காணப்பட்டது. இது உண்மையாய் இருக்குமானால் அதை ஒருபக்கா காலித்தனம் என்றும், இதற்கு ஆதரவாய் இருந்த விருதுநகர் தோழர்களுக்கு இது ஒரு பெரிய அவமானகரமான காரியமென்றும் வலிமையாய்க்கூறுகிறோம்.

நம்நாட்டு அரசியல் வாழ்க்கை என்பது எவ்வளவு கேவலமானதாக இருந்தாலும் அது பெரிதும் வகுப்புப்போராட்டத்தன்மையை உட்கருத்தாய்க்கொண்டு வெளிப்படையான போட்டி முறையில் நடந்து வருகின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்நிலையில் இருபுறமும் போட்டியில் கலந்து கொள்ள எவருக்கும் உரிமை இருக்கின்றது என்பதை நாம் மறுக்க வரவில்லை.

அப்போட்டிகளில் பல சூட்சிகள், பொய், புரட்டுகள் உபகருவிகளாய் பயன் படுத்தப்பட்டு வருவதும் சகஜமான காரியமாய் இருந்து வருகின்றது. காலநிலையில் இவைகள் எல்லாம் அனுமதிக்கத்தக்கதாக இருந்து வந்தாலும் காலித்தனங்கள் என்பவைகளை கண்டிக்காமல் இருக்கமுடியவில்லை. கூட்டத்தில் கல்லெறிவது, செருப்பு எறிவது, கூச்சல் போட்டு குழப்பங்கள் செய்வது ஆகிய காரியங்களை இழிதொழில்கள் என்றே சொல்லுவோம். இதைப்பற்றி பல தடவைகளில் எழுதியும் வந்திருக்கிறோம். அப்படி இருக்க விருதுநகர் தோழர்கள் யாராயிருந்தாலும் இதைக் கைக்கொண்டது மிகவும் வருந்தத்தக்க காரியம் என்பதோடு, சுயமரியாதைக்காரர்கள் யாராவது இதில் கலந்திருப்பார்களானால் அதற்காக மிகுதியும் வெட்கப்படவேண்டிய நிலையில் இருக்கிறோம். காங்கிரஸ்காரர்கள் பல இடங்களில் இப்படி நடந்திருக்கிறார்கள் என்பதோடு மாத்திரம் அல்லாமல் கூட்டங்களில் குறிப்பிட்ட மக்களை மிக இழிவாகவும், கேவலமாகவும் பேசி வருகிறார்கள் என்பதையும் அறிவோம். அப்படிப்பட்ட காரியங்களை காங்கிரஸ் பத்திரிக்கைகள் பெருமையாய்க் கொண்டாடி அதிக விளம்பரம் செய்து மகிழ்வதையும் பார்த்து இருக்கிறோம்.

ஆனால் காங்கிரஸ்காரர்கள் அல்லாதவர்கள் யாராய் இருந்தாலும் அவர்களும் இம்மாதிரி காலித்தனத்தில் பங்குகொள்வது என்றால் காலித்தனம் காங்கிரசுக்கே சொந்தமாயிருந்து வந்தது என்பதுமாறி இப்போது எல்லோருக்கும் சொந்தமாய் விட்டது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறதுடன் இம்மாதிரிகாரியம் இழிவு இழிவு மிக இழிவு ஆனது என்பதை வலியுறுத்துகிறோம்.

நிற்க தோழர் சத்தியமூர்த்தி ஐயர் அவர்கள் ஒரு கொள்கையை தாக்கிப்பேசுவதைப்பற்றியோ, ஒரு சமூக அல்லது கட்சி நடப்பைக் கண்டிப்பதைப்பற்றியோ நாம் தடுக்க வரவில்லை. கூடுமானால் தக்கபதில் மரியாதையுடன் அளிக்கவே ஆசைப்படுவோம்.

ஆனால் தோழர் சத்தியமூர்த்தி ஐயர் மேடைகளில் நின்று பேசும்போது தனக்குப்பிடிக்காதவர்களை மரியாதைக் கிரமமின்றி பேசுவதோடு மாத்திரம் அல்லாமல் அவன் இவன் என்கின்ற மதுபானக்கடை பாஷையில் பேசுவது என்பது மிகவும் வெறுக்கத்தக்கதாகும்.

சமீபத்தில் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் ஈரோட்டிற்கு வந்திருந்தபோது ஒரு பொதுக்கூட்டத்தில்பேசுகையில் தொழர்கள் ஷண்முகம் பொப்பிலி ராஜா ஆகியவர்களை அவன் இவன் என்று ஒருமையிலேயேபேசியே வைதார். உடனே சில தோழர்கள் வந்து அவருக்கு மரியாதை கற்பிக்க அனுமதிகேட்டார்கள். அப்பொழுது சில தோழர்கள் அதைத்தடுத்து கூட்டத்தில் எவ்வித சிறு கூச்சலும் இல்லாமல் இருக்கஏற்பாடு செய்தார்களே ஒழிய வேறு ஒன்றும் செய்யவில்லை.

காலித்தனமோ கூச்சலோ குழப்பமோ செய்வது என்பது மிக எளிதான காரியம் அதனால் பலன் ஒன்றும் ஏற்படப்போவதில்லை. கருப்புக்கொடிபிடிப்பது கூட அவசியமில்லாத காரியம் என்று தான் நமக்கு இப்போது தோன்றுகின்றது. அதையும் சுயமரியாதைக்காரர்கள் வெறுக்கவேண்டும் என்பது தான் நமது ஆசை.

ஆகையால் இனி இப்படிப்பட்ட காரியம் எங்கும் எவராலும் நடக்காமல் இருக்க வேண்டும் என்பதாக நாம் ஆசைப்படுகின்றோம் என்பதோடு பொறுப்புள்ள தலைவர்களாகவோ, பத்திரிக்கைகாரர்களாகவோ இருக்கிறவர்கள் இதுகளுக்கு ஆதரவோ உர்சாகமே அளிக்காமல் தங்கள் வெறுப்புகளை காட்டுவதின் மூலம் எங்கும் நடைபெறாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்வார்களாக.

# கட்சியில் குழப்பம் வேண்டாம்.

"நகரதூதன்"

சென்ற நவம்பர் மாதம் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தலில் பார்ப்பனரல்லாதார் மிகக் கேவலமாய்த் தோல்வியடைந்ததிலிருந்து ஜஸ்டிஸ் கட்சியில் எதிர் பாராதபடி மிகுந்த குழப்பம் மேற்பட்டிருக்கிறது. அந்நிலைமை தேர்தல் தோல்வியை விட நமக்குப் பெருந்துக்கத்தை உண்டாக்கி விட்டது. தோல்விக்குக் காரணங்கள் பலவிருந்திருப்பதை யாவருமநன்குஅறிந்திருந்தும், அவைகளை ஒவ்வொரு சாரார் ஒவ்வொரு விதமாக அங்கீகரிக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் ஒரு விதமாகவும், சுயமரியாதை சங்கத்தார் ஒரு விதமாகவும், ஜஸ்டிஸ் கட்சித்தலைவர்கள் ஒரு விதமாகவும், பிரபலஸ்தர்கள் ஒரு விதமாகவும், பொது ஜனங்கள் ஒரு விதமாகவும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியின் தோல்விக்குக் காரணமாகச்சொல்லப்படும் பற்பலருடைய அபிப்பிராயங்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டுக் கடுமையான விவாதங்களில் இறங்கிக் கொண்டிருக்கின்றன. ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் சென்ற தேர்தல் சம்பந்தமாக நடந்து கொண்டதைச் சிலர் ஆதரித்தும், சிலர் கண்டித்தும் வருகிறார்கள். பிராமணரல்லாத இளைஞர் சங்கங்களில் சில, ஜஸ்டிஸ் கட்சி காரியதரிசி தமது பதவியை ராஜிநாமா செய்ததில் சந்தோஷமடைகின்றன. சில அதை நேர்முகமாகவும், மறைமுகமாகவும் கண்டிக்கின்றன. இத்தகைய பேத நிலைமையில் தலைவர்கள் பலருள்ளும் மனக்கசப்புகள் ஏற்படக்கூடியதாகவுமிருக்கிறது. எனினும் ஒவ்வொரு வித அபிப்பிராயமும் ஒவ்வொரு உண்மை பற்றியதாகவே இருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். இப்போதுள்ள குழப்பம் காரணமாகப் புதிய தீங்குகளுக்கும் வழி செய்யச் சிலர் மிகவும் இழிவான மார்க்கத்தைக் கைக்கொள்ளவும் துணிந்து விட்டார்கள்.

பிராமணர் பிராமணரல்லாதவர் என்ற பாகுபாடே கேவலமானது என்று பறைசாற்றி வந்த பிராமணர்கள் இப்போது ஜஸ்டிஸ் கட்சியைக் குலைத்து விட வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடு ஆந்திரர்கள்—தமிழர்கள் என்ற பிரிவை உண்டாக்கி ஜஸ்டிஸ் கட்சியின் உணர்ச்சியையும், இயக்கத்தையும் அழித்து விடச் சூழ்ச்சிகள் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் விஷமத்தனமானதென்பதில் சந்தேகமில்லை.

சட்ட சபைகள் வெறும் தோற்றமேயென்றும், அங்கிருந்து கொண்டு ஜனங்களுக்கு விசேஷ நன்மை எதுவும் செய்ய முடியாதென்றும் சர்க்காரின் வலிமையைச் சட்டசபை ஒரு சிறிதும் அசைக்க முடியாதென்றும் பிரபல காங்கிரஸ் தலைவர்களெல்லாம் பகிரங்கமாய் வெளியிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்கள் இப்போது சட்ட சபையில் புகுந்து விட்டதற்காக ஆனந்தக்கூத்தாடுகிறார்கள். சென்ற வியாழக்கிழமையன்று தோழர் சத்தியமூர்த்தி ஈரோட்டில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியபோது "நானும் ராஜகோபாலாச்சாரியும் கவர்னராக ஆவோம். இதை நீங்கள் நம்புங்கள், சிரிக்காதீர்கள்" என்று சொல்லி கூடிய விரைவில் இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைத்தே தீரும் என்றாராம். ஜாதி இறுமாப்பும், மதத்துவேஷங்களும், மூட நம்பிக்கையும் உடையவர்கள் கையில் அதிகாரமிருந்தால் பிராமணரல்லாதவர்களின் கதி என்னவாகுமென்பதைப்பற்றி நாம் விளக்க வேண்டியதில்லை. உலகத்தில் பிராமணர்கள் தான் பிறக்கும்போதே புண்ணியசீலர்களாய்ப் பிறந்தார்களென்றும், பிராமணரல்லாதார் யாவரும் பாவிகள் என்றும் கேவலமான இறுமாப்பு படைத்த மக்கள் சமூகத்தில் பிறப்பின் காரணமாக இழிவையும், சிறுமையையும் நிலைநிறுத்திப் பிறரைக் கீழ்மைப் படுத்தியே வைத்திருக்கப் பேராசை கொண்டிருப்பவர்கள் கையில் அரசியல் அதிகாரமும் சென்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

# நீதிக்கட்சி நிலைத்திருக்கவேண்டுமானால் அது உடனே செய்யவேண்டிய முதல் வேலை.

(தோழர் C. D, நாயகம்)

நீதிக்கட்சி துவக்கப்பட்ட பொழுது சட்டசபை முதலிய இடங்களில் போதிய அளவு இடம் பெறாத இனத்தாரிலும், வருவதற்கே முடியாமல் தடுக்கப்பட்டிருந்த இனத்தாரிலும் ஒரு குறைந்தஎண்ணிக்கையுடையோராவது இடம் பெற வேண்டும் என்ற ஏற்பாட்டை சட்ட மூலமாக உறுதிப்படுத்துவதே (அதாவது சகல வகுப்பாருக்கும் சம சந்தர்ப்பம் வழங்குவதே) முதல் நோக்கமாக இருந்தது. அந்த நோக்கத்தில் வெற்றி பெறுவதற்குக் கடும் முயற்சி செய்ய வேண்டி இருந்தது. அதற்கு இடையூறுகள் பல ஏற்பட்டன. மாற்றாரிடமிருந்து மாத்திரமல்ல. நடு நிலையிலுள்ளவர்களிடமிருந்தும், தன்னினத்தாரிடமிருந்தும் முட்டுக்கட்டைகள் புறப்பட்டன. அவைகளை எல்லாம் மீறி நீதிக்கட்சியார் தங்கள் விருப்பத்தில் வெற்றி பெற்றனர். சென்னை மாகாண சட்டசபையில் இத்தனைபெயராவது பார்ப்பனரல்லாதார் வர வேண்டும் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது. சற்று பொறுத்துத் தேர்தலும் வந்தது. அதுவரை ஒதுங்கி இருந்தவர்கள் உள்ளம் பூரிப்படையும்படி குறிப்பிட்ட குறைந்த எண்ணுக்கு பன்மடங்காகப் பார்ப்பனரல்லாதார் சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். இந்தச்சட்டம் செய்ய எடுத்த ஊக்கத்தின் பலன் இதோடு நிற்கவில்லை. அமைச்சர் கழகம் முழுவதுமே பார்ப்பனரல்லாதாராலேயே ஆக்கப்பட்டது. சட்டசபையில் மாத்திரமல்ல, நாட்டாண்மைக்கழகம், நகராண்மைக்கழகம், இவைகளிலும் பார்ப்பனரல்லாதாரே பெருந் தொகுதியார் இடம் பெற்றனர். நாளாக ஆக இவர்கள் எண்ணிக்கை சட்டசபையிலும், நாட்டாண்மை, நகராண்மைக்கழகங்களிலும், பின்னால் வந்த கல்விக்கழகங்களிலும்' பெருகிக் கொண்டே வந்தது. அடுத்த தேர்தலிலும் இவர்களே பெருந்தொகுதியினராக வர ஆரம்பித்தனர். வரவர இந்நிலையங்களிலெல்லாம் பருத்தி நூல்காரர் (பார்ப்பனர்) எண்ணிக்கை குறுகிக்கொண்டே வந்தது. எல்லா இடங்களிலும் நூலணியாத பெருமக்களே இடம் பெற்று ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர். நூலணியாத தூய உடலார் குறைந்தது இவ்வளவு பெயராவது சட்டசபையில் இருக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இருப்பது கூட பலருக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லாது போய்விட்டது. அந்தச் சட்டத்தை எடுத்து விடலாம் என்று சொல்லவும் அந்த மக்களில் பலருக்கு மன உறுதி ஏற்பட்டுவிட்டது. அவ்வித வெளி உதவியும் கட்டுப்பாடும் இன்றித்தங்கள் உரிமையைத் தாங்கள் பெறக்கூடும் என்ற மன உறுதி நூலால் பழுதுபாடத தூய உடலார் பலருக்கு ஏற்பட்டது.

2. அப்படி அவர்கள் மனம் உரம்பெற்று வருங்காலத்தில் அவ்வினத்து அமைச்சர் முத்தைய முதலியாரால் அரசியல் வேலையிலும், தூய உடலார் இத்தனை பெயராவது இருக்கவேண்டும் என்ற ஒரு விதியை ஏற்படுத்த முன் வந்தனர். அதற்கு எதிராக முன்போலவே பலர் கூக்குரலிட்டார்கள். நடு நிலையில் நிற்க வேண்டிய பலர் ஏமாற்றப்பட்டு கூக்குரலுக்குப்பக்கப்பாட்டுப் பாடினர். தன் தலையில் தானே மண்ணை வாரிப் போடும் மனப்பான்மை யுடைய அறிவைப்பறிகொடுத்த பதர்கள் அதற்குத்தாளம் போட்டனர். எனினும் அமைச்சர் முத்தைய முதலியார் அறிவுடையோர் உதவியால் அந்த விதியை நிலைநாட்டினர். பருத்திநூல்காரர்கள் இத்தனைபெயர், அவர்கள் தாயாதிகளாகிய ஆதிதிராவிடர் முதலியோர் இத்தனை பெயர், நூலால் பழுதுபடாத தூய உடலார் இத்தனை பெயர், என்றவிதி அரசியல் வேலை, விதியில் உறுதியான இடம் பெற்றது. இப்பொழுதுள்ள முதல் அமைச்சர் உழைப்பால் நாட்டாண்மை நகராண்மை வேலைகளிலும் அந்த விதி இடம் பெற்று விட்டது. இடையில் புகைவண்டித் தொடர்வேலையிலும் அந்த விதியின் சாயல் ஒட்டிக் கொண்டது

3. இந்த நிலைமையில் அரசியல் சட்டம் மாறப்போகிறது. அதில் சட்ட சபையில் பருத்தி நூல்காரர் இத்தனை பெயருக்கு மேல் வரக்கூடாதென்ற கட்டுப்பாட்டுச்சட்டம் எடுத்துவிடப் போகிறார்கள். அது இருக்க வேண்டும் என்று விரும்புவாரை ஒருவரையுங்காணோம். நூலணியாப் பெருமக்கள் இப்பொழுது விரும்புவதெல்லாம் அரசாட்சிப்பாதுகாப்பிலுள்ள ஒவ்வொரு வேலையிலும் தங்களுக்குரிய பங்கு தங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்பதே அதற்குரிய விதி. இப்பொழுதைய நிகழ்ச்சி முறையிலிருப்பது போதாது. இப்பொழுதைய விதி என்னவென்றால் ஒவ்வொரு வேலைத்துறையிலும் இனி நியமிக்கப்படுகிற வேலையில் பன்னிரண்டு பெயரில் இருவர் பருத்தி நூல்காரராயிருக்க வேண்டுமென்பது. இந்த விகிதம் பெரிதும் பழுதுடையது. நூற்றுக்கு மூன்று பெயரே உள்ள பருத்தி நூல்காரருக்கு நூற்றுக்கு பதினாறு பெயர் வேலைபெற வேண்டுமென்று விதித்திருப்பது அவர்களின் உரிமைக்கு ஐந்து மடங்குக்குமேல் அதிகமாக அவர்களுக்குக் கொடுத்ததாகும். இப்படிச் செய்வதால் நூலணியாப் பெருமக்கள் பலருக்கு உரிமையாகிய சாப்பாட்டைப் பறித்துப் பருத்தி நூல்காரர் வாயில் போட்டதாகும். இந்நாட்டில் நிலவரிக்கு அடுத்ததாக அரசாட்சிக்குப் பெரும் வரும்படி தருவது கள்ளுக்கடை முதலிய கலால்வரியாகும். பயிரிடுபவர்களிடமும், பயிர் நிலமுடையவர்களிடமும், கலால் துறையிலும்வரியை வாங்கி அந்த வரி செலுத்திய மக்களின் பிள்ளைகள் பசியால் வருந்த விட்டுப் புளியேப்பம் விடும் பருத்தி நூல்காரர்களைப் பருக்க வைக்க அவ் வரிப் பணத்தைச் செலவிடுகிறதென்றால், இதனிலும் பொருந்தாச் செயல் வேறொன்றும் இராது. பருத்தி நூல்காரர்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு அவர்கள் பொதுப் பணத்தில் சம்பளம் பெறுவதை யாரும் தடுக்க விரும்பவில்லை. ஆகையால் ஒவ்வொரு வேலைத் துறையிலும் நூற்றுக்கு மூன்றுக்கு மேல் அவர்கள் வேலை பெறக்கூடாதென்று வேலை விதியை மாற்ற வேண்டும். மாற்றப்பட வேண்டியது எண்ணிக்கை விகிதத்தில் மாத்திரமல்ல, நியமன முறையிலும் உடனே மாறுதல் ஏற்பட வேண்டும். நூற்றுக்குத் தொண்ணூறு பெயர் பருத்தி நூல்காரராக நிரம்பியிருக்கிற ஒரு வேலை நிலையத்தில் ஏற்படுகிற காலி இடத்தில் மேலே கேட்ட உரிமைப்படியுள்ள பெரும் விகிதப்படி நூற்றுக்கு மூன்று வீதம் பருத்தி நூல்காரரை நியமித்துக்கொண்டிருந்தால் தற்போது அந் நிலையத்திலுள்ள நூற்றுக்கு தொண்ணூறான பருத்தி நூல்காரப் பூண்டு நூற்றுக்கு மூன்றாகக் குறைந்து மற்ற செடிகளை வளர விடுவது எப்பொழுது? இன்னும் இருநூறு ஆண்டானாலும் முடியாது போலல்லவா இருக்கிறது? ஆகையால் வேலை விகிதத்தில் நீதிக் கட்சியின் அடிப்படையான நீதியைச் செலுத்த வேண்டுமானால், அந்த வேலை நிலையத்தில் பருத்தி நூல்காரர்கள் நூற்றுக்கு மூன்றாகக் குறையும் வரை, புதுப் பருத்தி நூல்காரர்களை நியமிக்கவே கூடாது. இது தான் பெரும்பாலும் நீதியான முறையாகும். அவர்கள் எண்ணிக்கை உடனே நூற்றுக்கு மூன்றாகக் குறையும்படி இருக்கிற பருத்தி நூல்காரர்களில் அந்த விகிதத்திற்கு அதிகப்பட்டவர்களை உடனே வெளிப்படுத்தி விட்டு மற்ற இனத்தார்களை அவரவர்களுக்குரிய விகிதப்படி அந்த இடங்களில் நியமிப்பது தூயநீதியாகும் எனினும் அதை இப்பொழுது வற்புறுத்தவில்லை. தங்கள் இனத்திற்குரிய விகிதத்திற்கு அதிகமாக வேலை பெற்றுள்ள எல்லாரிடமும் இம்முறையை உடனே கைக்கொண்டு எல்லா இனத்தையும் அதற்குரிய உயர்வுக்குக் கொண்டு வர வேண்டும் இம் முறை மாகாண அரசாட்சியின் கீழுள்ள வேலைகளில் மாத்திரமல்ல; நாட்டாண்மை, நகராண்மை வேலைகளில் மாத்திரமல்ல. அரசாட்சியின் பெரும் பணத்தாலும் அரசாட்சியின் உதவியாலும் நடத்தப்படும் புகை வண்டி முதலிய போக்கு வரத்துத் துறை வேலைகளிலும் வற்புறுத்தப்பட வேண்டும். இது மாத்திரமல்ல. இம் மாகாணத்திலுள்ள அரசாட்சி வேலைத் துறைகளில் கணிசமானவை இந்திய அரசாட்சியின் கீழ் உள்ளன. தபால், தந்தி, வருமானவரி, தணிக்கை முதலிய வேலைத் துறைகள் அப்படிப்பட்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

# ஜஸ்டிஸ் கட்சியும் பார்ப்பனப் பத்திரிகைகளும்.

## விருதுநகரில் தலைவர்கள் மகாநாடு.

ஜஸ்டிஸ் கட்சி இந்திய சட்டசபைத் தேர்தலில் தோல்வி அடைந்து விட்டது.

அதற்குக்காரணம் இருவகைப்படும். ஒன்று ஜஸ்டிஸ் கட்சிக்கு எல்லா இந்திய அரசியல் கிளர்ச்சியில் விசேஷ கவனம் செலுத்த அவசியமில்லை. அது செலுத்தவும் முடியாது. ஏனெனில்ஜஸ்டிஸ்கட்சிக்கு எல்லா இந்திய ஸ்தாபனம் என்பதாக ஒரு ஸ்தாபனம் இல்லை என்பதோடு ஜஸ்டிஸ் கட்சி ஏற்படுத்தப்பட்டதற்குக் காரணமே தென் இந்திய பார்ப்பனர்களின் கொடுமையைத் தாங்கமாட்டாமல் அதிலிருந்து தப்பி ஒரு வாறு விடுதலை பெறவேண்டிய அவசியமேயாகும்.

ஆனால் அதன் எதிரிகளாகிய பார்ப்பனர்கள் அக்கட்சியை ஒழிக்க அரசியல் போர்வையை போத்திக்கொண்டு அதற்குள் இருந்து எதிர்த்து வந்ததால் ஜஸ்டிஸ் கட்சியும் தனது லட்சியத்திற்கு அரசியல் சம்மந்தமும் வைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று என்றாலும் பார்ப்பனர்களுடைய அரசியல் வேஷம் எல்லா இந்தியாவைப்பொருத்ததாகவும், ஜஸ்டிஸ் கட்சியாருடைய அரசியல் சம்பந்தம் சென்னை மாகாணத்தை மாத்திரம் பொருத்ததாகவும் இருந்ததால் அரசியலில் பார்ப்பனர்களோடு சரியாய் போட்டி போட முடியாமலும், போட்டி போட வேண்டிய அவசியமில்லாமலும் போய்விட்டது. ஆயினும் எல்லா இந்திய அரசியல் என்னும் பேச்சின் பேரால் பார்ப்பனர்கள் ஜஸ்டிஸ்கட்சியைப்பற்றி விஷமப் பிரசாரம் செய்யாமல் இருப்பதற்காகவும் இந்திய சட்டசபையில் பார்ப்பனர்களால் கெடுதி ஏற்படாமல் இருப்பதற்காகவும் ஒருவர் இருவர் அதிலும் கலந்திருந்தால் நலமாய் இருக்கும் என்று கருதி சிலர் அதில் கலந்திருந்தார்கள்.

ஆனால் அதில் பார்ப்பனர்களுக்கு இருந்த அளவு ஊக்கமும், முயற்சியும் ஜஸ்டிஸ் கட்சியாருக்கு இருந்தது என்று சொல்ல முடியாது. இருந்த போதிலும் கிடைத்த அளவு கிடைக்கட்டும் என்கின்ற அலட்சிய புத்தி மீதும் போதிய முஸ்தீபுகள் இருக்கின்றதா இல்லையா என்கின்ற கவலை இல்லாமலும் அதில் பிரவேசித்தார்கள்.

இரண்டொரு ஸ்தான விஷயத்தில் சிறிது கவலை கொண்டார்களானாலும் அந்தக்கவலைக்குத்தக்க அளவு நம்பிக்கை மோசத்துக்கு ஆளாகி விட்டதால் இத்தோல்வி கட்சியின் எதிரிகளாகிய பார்ப்பனர்களுக்கு அதிகமாய்ப்பரிசிக்க இடம் கொடுத்துவிட்டது.

இரண்டாவது காரணம்—

ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொண்டதால் பொது ஜனங்கள் அதை தப்பாக உணர்ந்து ஜஸ்டிஸ் கட்சிக்கும், மற்ற கட்சிக்கும் வித்தியாசமில்லை ஆதலால் முதலில் வந்து கேட்டவர்களுக்கும், வந்து கூப்பிட்டவர்களுக்கும் ஓட்டுப் போட்டால் போகிறது என்று நினைத்திருந்த காரணம். (பார்ப்பனரைச்சேர்த்துக்கொண்ட காரணத்தையும், என்ன நிபந்தனையின் மீது சேர்த்துக்கொள்வது என்பதையும் மக்களுக்குச்சரியாய் விளக்கிக்காட்டாததால் இது ஏற்பட்டது) இவற்றால் எல்லாம் ஏதும் முழுகிப் போய் விடவில்லை என்பது ஒரு புறமிருக்க நம்பிக்கை மோசம்என்பதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் கட்சிக்கு சிறிது தொல்லை ஏற்பட இடமுண்டாகி விட்டது. பார்ப்பனர்கள் பரிகசிப்பதற்கு இதுவும் ஒரு அனுகூல சம்பவமாய் விட்டதால் மேடைகளிலும், பத்திரிகைகளிலும் திண்ணைகளிலும், அவர்களது ஆதிக்கத்திலிருக்கும் கோர்ட்டுகளிலும் இதே பேச்சாகவும் கட்சிக்கு பெரியதொரு சங்கடமான நிலைமை வந்து விட்டதாகவும், கட்சியே ஒழிந்து போய் விடும் என்றும் பேசி பல விதகற்பனைகள் செய்து விஷமப்பிரசாரமும் செய்து வருகிறார்கள்.

நம்பிக்கை மோசம் என்ற காரணத்துக்காக வெளியேற வேண்டிய அவசியத்துக்குள்ளான செட்டிநாடு (குடும்பம் ஏராளமான செல்வமுடைய குடும்பமானதால்) கட்சிக்கு விரோதமாகப் பார்ப்பனர்களுடன் சேர்ந்துகொண்டு செல்வத்தை வாரி இறைப்பதின் பயனாய் கட்சியானது மேலும் சிறிது தொல்லைக்கு ஆளாகவேண்டி ஏற்பட்டு விட்டது.

இதனால் எல்லாம் கட்சியே ஒழிந்து போகும் என்றோ, கட்சியே ஒழிந்து போனாலும் கட்சிக் கொள்கைகள் மறைந்து போகும் என்றோ நாம் பயப்படவில்லை.

பெருமாள் போய் விட்டால் பெரிய பெருமாளாய் வருவான் என்கின்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

ஏனெனில் அக்கட்சியின் அடிப்படையான கொள்கை அவ்வளவு முக்கியமானதும், அவசியமானதும் என்பது நமது அபிப்பிராயம். ஆதலால் அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை.

ஆனால் இந்திய சட்டசபைத் தேர்தல் முடிவு தெரியப்பட்ட காலமுதல், நாளதுவரை சுமார் இரண்டு மாதகாலமாக கட்சியின் எதிர்கால நிலைமையைப்பற்றி கவலைஎடுத்துக்கொள்ளும்படியும், கொள்கைகள் வெற்றி பெறத் தக்க திட்டங்கள் ஏற்படுத்த வேண்டும் என்றும் பல தோழர்கள் கூப்பாடு போட்டு வந்தும் அதைப்பற்றி சிறிதும் கவனித்ததாக காணப்படாமல் இருப்பதை உத்தேசித்தே கட்சிப்பிரமுகர்களின் கவலையீனத்துக்கு வருந்த வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இதைப் பற்றியே விருதுநகர் சேர்மென் தோழர் வி. வி. ராமசாமி அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அது மற்றொரு இடத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

### அதன் சாரம்.

இந்தியசட்டசபைத் தேர்தல் முடிவடைந்த ஒருமாத காலமாக கட்சியைச் சேர்ந்த அனேகர் கொதிப்பும், பரபரப்பும், உணர்ச்சியும் கொண்டு எவ்வளவு முயற்சி செய்தும் சென்னையில் உள்ள தலைவர்கள் மூன் வராதது பொருப்பற்ற காரியமாகும் என்பதாக குறிப்பிட்டிருக்கிறார். மற்றும் நமது கட்சிக்கு ஒரு தாய்மொழி தினசரியும், மத்திய பிரசாரசபையும் ஏற்படுத்த வேண்டும் என்றும், சீக்கிரத்தில் ஒரு விசேஷ மகாநாடு கூட்ட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

கடைசியாக இதைச்செய்யாவிட்டால் ஜனங்களுக்கு கட்சியின் மீதுள்ள நம்பிக்கை சிதறுண்டு போய் கொள்கையையும் பரப்ப இடமே இல்லாமல் போய் விடும் என்றும் எச்சரிக்கை செய்கிறார்.

இந்த அபிப்பிராயமேதான் தமிழ்நாட்டு மக்களின் உண்மையானதும், சரியானதுமான அபிப்பிராயமாகும் என்பது நமது கருத்து.

இதற்குத் தக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டியது தோழர்கள் பொப்பிலிராஜா, சர் ஷண்முகம் ஆகியவர்களின் கடமையாகும்.

தோழர் பொப்பிலிக்கு மந்திரி பதவி போய்விட்டாலும், ராஜா பதவி போய் விடாது என்கின்ற தைரியம் அவருக்கு உண்டு என்பதும், தோழர் ஷண்முகத்துக்கு இந்தியசட்டசபை மெம்பர்பதவி போய்விட்டாலும், நிர்வாகசபை மெம்பர்பதவியோ, கவர்னர் பதவியோ போய்விடாது என்கின்ற தைரியம் உண்டு என்பதும் நமக்குத்தெரியும்.

ஆனால் இந்த நிலையில் தக்கதொரு முயற்சி எடுத்துக்கொள்ளாவிட்டால் அதோடு கூடவே நல்ல கொள்கையுடைய கட்சியை குலைத்து மக்களுக்கு துரோகம் செய்து விட்டுப்போய் விட்டார்கள் என்கின்ற பழிமொழியும்இவர்களை விட்டுப்போகாது. என்பதையும் உணர வேண்டுகின்றோம்.

முடிவாக விருதுநகர் தோழர் ராமசாமி அவர்கள் மேற்கண்ட விஷயமாய் ஆராய்ந்து முடிசெய்யவும், பல தலைவர்களையும் ஒன்று சேர்க்கவும் விருதுநகரில் ஒரு தலைவர்கள் மகாநாடு கூட்டலாமா என்று யோசிப்பதற்காக விருதுநகர் தென்னிந்திய நலஉரிமைச்சங்க சார்பாக ஒரு முன்னேற்பாடு கூட்டம் கூட்டப்போவதாகவும் தெரிவித்து இருக்கிறார். அக்கூட்டம் வெற்றி பெற்று அதன் பயனாய் விருதுநகரில் பெரியதொரு கூட்டம் கூட்டி ஏதாவது ஒரு நன் முடிவுக்கு வரவேண்டுமென்றே நாம் ஆசைப்படுகின்றோம்.

## ஈரோடு மகாஜன வாசகசாலை திறப்பு விழா.

24-12-34 தேதி மாலை 6 மணிக்கு ஈரோடு மண்டப வீதி 30 நெம்பர் கட்டத்தில் முனிசிபல் கமிஷனர் தோழர் டி. புருஷோத்தம் அவர்கள் தலைமையில் தோழர் எச். ஏ. பாப்பிளி துரை அவர்களால் ஈரோடு மகாஜன வாசகசாலை திறந்து வைக்கப்பட்டது. தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் வாசகசாலையின் மேன்மை என்பது பற்றிபேசினர்.

தோழர் கஸ்தூரிரங்கையங்கார் அவர்கள்வாசகசாலை நிலைத்து இருக்கும்படி செய்ய வேண்டுமென்று பேசினர். காரியதரிசி தோழர் எஸ். வி. பழனிமுத்து அவர்கள்வந்தனோபசாரம்கூறினர்

# பகுத்தறிவு.

ஈரோடு, 1934-ஆு டிசம்பர்-மீ 30-உ

## சுயமரியாதை மகாநாடுகள்.

சுயமரியாதை மகாநாடுகள் தமிழ் நாட்டில் ஜில்லாக்கள், தாலூக்காகள் தோறும் வாரம் தவறாமல் அடுத்து அடுத்து நடந்து வந்தது நேயர்கள் அறிந்ததாகும்.

தோழர் ஈ. வெ. ராமசாமி ராஜத் துவேஷக் குற்றத்திற்காக சிறை சென்ற பின் சுயமரியாதைச் சங்க நிர்வாகக் கமிட்டியார் கூடி மகாநாடுகள் கூட்டக்கூடாது என்று கண்டிப்பான உத்திரவு போட்டதான தீர்மானம் நிறைவேற்றியதையே காரணமாய்வைத்து 5, 6 மாத காலமாக மகாநாடுகளே எங்கும் நடக்காமல் போய்விட்டது என்பது ஒரு காரணமாய்இருந்தாலும், அந்தத்தீர்மானம் திருச்சி நிர்வாக சபைக் கூட்டத்தில் ஓரளவு தளர்த்தப்பட்டு இருந்தும், வேறு பல காரணங்களால் தீர்மானம் தளர்த்தப்பட்டதை வெளியிடாமலும் பல இடங்களில் இருந்து மகாநாடு நடத்த வேண்டும் என்று முயற்சித்த முயற்சிகளையும் உற்சாகப்படுத்தாமல் இருந்து வந்திருக்கிறது. அதாவது சுமார் நான்கு மாதங்களுக்கு முன் பகுத்தறிவு 3-வது மலரின் தலையங்கமொன்றில் "நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்" என்கின்ற தலைப்பு கொண்ட தலையங்கத்தில் "சமீபத்தில் நடைபெறப் போகும் ஜஸ்டிஸ் கட்சி மகாநாடும், காங்கிரஸ் மகாநாடும் காங்கிரஸ் மாகாண மகாநாடும், நடந்த உடன் சுயமரியாதை மகாநாடோ, அல்லது சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் மகாநாடோ ஒன்று கூட்டி அதில் முடிவு செய்து கொள்ள வேண்டியவர்களாய் இருப்பதால் அது வரையில் நம் தோழர்கள் எல்லாத் துறையிலும் பொறுத்து இருக்க வேண்டும் என்பதோடு அதை எதிர் பார்த்தே நானும் பொறுத்து இருக்கிறேன்" என்று தோழர் ஈ. வெ. ரா. தனது சொந்தக் கையொப்பத்துடன் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்ததாகும்.

இப்போது மேற்குறிப்பிட்ட எல்லா மகாநாடுகளும் நடந்தாய் விட்டதால் மேல் குறிப்பிட்டபடி சுயமரியாதை மாகாண மகாநாடோ, அல்லது சு. ம. இயக்க தொண்டர்கள் மகாநாடோ ஒன்று கூட்ட வேண்டியது அவசியமான காரியம் என்பது நமது அபிப்பிராயம்.

இதை அனுசரித்து சுமார் 10, 20 இடங்களில் இருந்து மகாநாடு கூட்ட வேண்டுமென்று தீர்மானங்களும், வேண்டுகோள்களும் வந்திருப்பதோடு சில இடங்களில் தாங்களாகவே ஜில்லா, தாலூக்கா மகாநாடுகள் கூட்டுவதாகவும் தெரிவித்து இருக்கிறார்கள், குறிப்பாக தஞ்சை ஜில்லா மகாநாடு கூட்ட தஞ்சை சு. ம. சங்கக்காரியதரிசி தோழர் ஏகாம்பரம் அவர்கள் ஏற்பாடுகள் செய்து காரியாதிகளும் நடந்து வருவதாகத்தெரிகின்றது.

இந்த நிலையில் ஜஸ்டிஸ் கட்சியில் சில எதிர் பாராத சம்பவங்கள் நடந்து விட்டதால் எதற்காக "ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு, காங்கிரஸ் மகாநாடு, மாகாண காங்கிரஸ் மகாநாடு ஆகியவைகள் நடந்த பிறகு" என்று குறிப்பிடப்பட்டதோ அக்காரியம் முடிவு பெற்றதாகக் கருத முடியாமல் போய் விட்டது என்றாலும் இனியும் காலதாமதம் செய்து கொண்டு போவதில் பயனில்லை. எப்படியாவது ஜனவரி மாதத்தில் நாம் சுயமரியாதை மாகாண மகாநாடு கூட்டவோ, அல்லது தொண்டர்கள் மகாநாடு கூட்டி மாகாண மகாநாட்டுக்கு வேண்டிய ஏற்பாடு செய்யவோ, வேண்டியது மிக அவசியமான காரியம் என்றே கருதுகிறோம்.

தொண்டர் மகாநாடு என்று ஒன்று தனியாகக் கூட்டுவதைப் பார்க்கிலும் ஜனவரி மாதத்தில் நடக்க ஏற்பாடாகி வரும் தஞ்சை ஜில்லா மகாநாட்டுடனேயோ, அல்லது அதற்கே சகல தொண்டர்களும் வரும்படியான ஏற்பாடு செய்தோ அதில் முடிவு செய்வதும் பொருத்தமான காரியம என்றே கருதுகிறோம்.

எபபடியாவது ஜனவரி மாதத்தில் சுயமரியாதை இயக்கம் தனது வேலைத்திட்டத்தைப்புதுப்பித்துகாங்கிரசினுடையவோ, ஜஸ்டிஸ் கட்சியினுடையவோ அல்லது இரண்டினுடைய கூட்டுறவுடனேயோ அல்லது இரண்டின் கூட்டுறவும் இல்லாமல் தனித்து நின்றே தொண்டாற்ற முற்பட வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்துகின்றோம்.

காங்கிரசானது சட்ட மறுப்பு தத்துவங்களை அடியோடு விட்டுவிட்டு சட்ட முறைகளுக்குக் கட்டுப்பட்டு சர்க்காருடன் ஒத்துழைத்து தொண்டாற்ற முன்வந்த பிறகு அந்தப்படி இல்லாத வேறு எந்த இயக்கங்களையும் அரசாங்கம் அடியோடு நசுக்கப்பார்க்கும் என்பதில் யாதொரு ஆக்ஷேபணையும் இல்லை.

காங்கிரசானது தனது சட்ட மறுப்பு எண்ணங்களை கைவிட்டுவிட வேண்டியது தான் என்றமுடிவுக்கு வந்துவிட்டவுடன் சர்க்காருக்குக் காங்கிரசைத்தோற்கடிக்கச் செய்து விட்டோம் என்கின்ற மகிழ்ச்சி ஏற்பட்டுவிட்டதும் அம்மகிழ்ச்சியின் வேகம் சுயமரியாதை இயக்கத்தில் பாய்ந்து சுயமரியாதைச் சங்கங்களை ஒழிக்கப்பார்த்ததும் யாரும் அறியாததல்ல.

சுயமரியாதை இயக்கத்தில் எந்தக்காரியத்துக்கும் சட்டமறுப்பு செய்வதோ, "சத்தியாக்கிரகம்" செய்வதோ, பலாத்காரம் ஏற்படும் படியான எந்தக்காரியங்களையாவது செய்வதோ ஆகிய திட்டங்களோ, உணர்ச்சிகளோ இல்லை என்பது யாவரும் அறிந்ததாகும்.

ஆனால் சமுதாயத்துறையில் பழமை என்னும் பேராலும், வழக்கம்என்னும் பேராலும் இருந்துவருமு அனேக முறைகளில் பெரியதொரு மாற்றம் ஏற்பட வேண்டும் என்று கருதுகின்றது என்பதை நாம் மறைககவில்லை.

ஆதலால் சீக்கிரத்தில் அதன் வேலைத்திட்டங்களை விளக்கி திருத்தியோ, புதுப்பித்தோ மகாநாடுகள் கூட்டுவதன மூலம் பிரசாரம் செய்து அமுலுக்குக்கொண்டுவரச் செய்யவேண்டியதே அவசரவேலையாய்இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

## பார்ப்பன விஷமம்

### ஜஸ்டிஸ் கட்சி மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லையா?

—0—

இந்திய சட்டசபைத் தேர்தலில் பார்ப்பனர்கள் காங்கிரஸ், காந்தி என்கின்ற பேர்களால் செய்யப்பட்ட ஏமாற்றுப் பிரசாரத்தின் பயனும், இந்திய சட்டசபை ஸ்தானத்தைப் பற்றி ஜஸ்டிஸ் கக்ஷியார் தக்கபடி கவலைப்படாத காரணத்தாலும் பார்ப்பனர்கள் தாங்கள் வெற்றிபெற்றுவிட்டோம் என்கின்ற ஆணவத்தால் தலைகால் தெரியாமல் குதிக்கிறார்கள்.

தோழர் சத்தியமூர்த்தி ஐயர் அவர்கள் மேடையில் வாயைத் திறந்தால் யாரையும் அவன், இவன், அயோக்கியன் என்று இழி தன்மையாய்ப்பேசுவதும், ஹோம் மெம்பரை ராஜீனாமா செய்யச்செய்யவேண்டுமென்றும், லாமெம்பரை ராஜீனாமாச் செய்யச்செய்ய வேண்டுமென்றும் கவர்னரை உத்திரவு போடச் சொல்லுவதும்,

சட்டசபைகளைக் கலைக்கவேண்டுமென்பதும்,

தோழர் ராஜகோபாலாச்சாரி கவர்னராகவும், தான் சீப் செக்கரட்ரியாகவும், (பிரதானக் காரியதரிசியாகவும்) வரப்போகிறோம் என்பதுமான தலை கிறு கிறுத்த பேச்சுகளாகவே பேசி வருகிறார்.

இதற்கும் சிலபார்ப்பனக் கூலிகள் பின் பாட்டு பாடுவதும், கை தாளம் போடுவதுமான மானங்கெட்ட செய்கைகளுக்கு உட்பட்டு வயிறு வளர்க்கிறார்கள். பல கூலிப் பத்திரிகைகளும் இதை விளம்பரப்படுத்திக்கொண்டு வாழ்கின்றன

எப்படி இருந்தாலும் கூடிய சீக்கிரத்தில் இந்த கிறுகிறுப்பும், ஆணவமும் அடங்கப் போகிறது. என்பதில் நமக்குச் சந்தேகமில்லை.

### பலம் குறைந்து விட்டதா?

நிற்க சமீபத்தில் சென்னையிலும், திருச்சியிலும் நடந்த சென்னை சட்டசபைஉபதேர்தலில் ஜஸ்டிஸ் கக்ஷியார் அபேட்சகர்களை நிறுத்தாததால் ஜஸ்டிஸ் கக்ஷியின் பலம் குறைந்துவிட்டதாகவும் அந்த இரண்டு தேர்தலிலும் காங்கிரஸ் ஜெயித்து விட்டதாகவும், ஆதலால் காங்கிரசுக்கே நாட்டில் செல்வாக்கு இருக்கின்றதென்றும் ஆதலால் மந்திரி சபை

யை ஒழித்து காலி செய்து காங்கிரசின் வசம் ஒப்புவிக்க வேண்டுமென்றும் பார்ப்பனர்கள் பேசி பாமர மக்களை ஏமாற்றி ஆதிக்கம் செலுத்தப் பார்க்கிறார்கள்.

ஹிந்து, சுதேசமித்திரன் முதலியஎல்லா பத்திரிகைகளும்இதே கூப்பாடு போட்டு மக்களை ஏமாற்றப் பார்க்கின்றன.

ஆனால் உண்மையில்உபதேர்தல்களில் காங்கிரசு வெற்றிபெற்றதா? நாட்டில் மற்ற பாமர மக்கள் காங்கிரசையே எல்லாத் தேர்தலிலும் ஆதரித்து இருக்கிறார்களா? என்பவைகளைப்பற்றிசிறிது யோசிப்போம். ஜஸ்டிஸ் கக்ஷி மந்திரி சபை புதிதாய் ஏற்பட்ட இந்த, 3, 4 வருஷத்துக்குள்ளும் சிறப்பாக சென்ற சில மாதங்களுக்குள்ளாகவும் ஏழு, எட்டு ஸ்தானங்கள் சென்னை சட்டசபையில் காலியாகி மறு தேர்தல்கள் நடந்திருக்கின்றன.

ஜஸ்டிஸ் கக்ஷிக்குப் போட்டியாக எத்தனையோ கக்ஷிகள் இருந்து வந்திருப்பதோடு காங்கிரசும் அவைகளுடன் போட்டி போடுவதும் ஜஸ்டிஸ்சின் எதிர்க் கக்ஷிகளுக்கு ஆதரவு கொடுப்பதுமான காரியங்கள் செய்துகொண்டும் வந்திருக்கின்றன. அப்படி யெல்லாம் இருந்தும் சகல தேர்தல்களிலும் ஜஸ்டிஸ் கக்ஷியே அனேகங்களில் போட்டியே இல்லாமலும் வெற்றி பெற்றிருக்கின்றன.

உதாரணமாக வட ஆற்காட்டில் தோழர் குப்புராவ் ஸ்தானம் காலியானதும் தோழர் ரங்கசாமி ரெட்டியார் ஜஸ்டிஸ் கக்ஷி சார்பாகவே நின்று வெறறி பெற்றார்.

சென்னை தோழர் ஆரோக்கியசாமி முதலியார் ஸ்தானம் காலியானதும் தோழர் அப்பாதுரை பிள்ளை ஜஸ்டிஸ் கக்ஷியின் பேராலேயே நின்று வெற்றி பெற்றார்.

தஞ்சையில் தோழர் பன்னீர்செல்வம் ஸ்தானம் காலியானதில் தோழர் சந்தனக்கவுண்டர் ஜஸ்டிஸ் கக்ஷியின் பேராலேயே நின்று வெற்றி பெற்றார்.

நெல்லூரில் தோழர் யாகியா ஆலி சாயபு ஸ்தானம் காலியானதில் தோழர் யாகியாஆலி அவர்களே ஜஸ்டிஸ் கக்ஷியின் பேராலேயே நின்று வெற்றி பெற்றார்.

திருநெல்வேலியில் தோழர்எட்டியாபுரம்ராஜா ஸ்தானம் காலியானதும் தோழர் ஐ. சி. ஈஸ்வரம் பிள்ளை ஜஸ்டிஸ் கட்சியின் பேராலேயே நின்று வெற்றி பெற்றார்.

அநந்தபூர்தோழர்லட்சுமணரெட்டி ஸ்தானம் காலியானதும்தோழர் ரங்கைப்பா ஜஸ்டிஸ் கட்சியின் பேராலேயே நின்று வெற்றி பெற்றார்.

இந்த தேர்தல்கள் சற்றேரக்குறைய 16 ஜில்லாக்களை சம்மந்தப்பட்ட தேர்தல்களாகும் என்பதோடு எதிர் கட்சியார் ஸ்தானம் இரண்டுஅதிகமாகவேவைகப்பற்றப்பட்டிருக்கின்றது.

இவற்றில் ஒன்றிலாவது காங்கிரஸ்காரர்களோ பார்ப்பனர்களோ தலைகாட்டவோ உச்சரிக்கவோ நினைக்கவோ முடியவில்லை. வடஆற்காடு, திருச்சி ஆகிய இரண்டு ஜில்லாவில் இருந்த பார்ப்பனர் ஸ்தானங்கள் பார்ப்பனரல்லாதார் கைக்குவந்துவிட்டன.

நிற்க சமீபத்தில் நடந்த இரண்டு தேர்தல் அதாவது சென்னை, திருச்சி இரண்டும் ஜஸ்டிஸ் கட்சி ஸ்தானங்கள் அல்ல என்பது யாவரும் அறிந்ததாகும்.

சென்னை ஸ்தானம் காங்கிரசின் ஸ்தானமாகும். அதற்கு காங்கிரஸ் ஆளே வந்ததாகவைத்துக் கொள்ளலாம்.

திருச்சி ஸ்தானமும் காங்கிரசின் சார்பாக ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிராக இருந்த கட்சியின் ஸ்தானமாகும். அதுவும்பார்ப்பனர் ஒருவர் இருந்த ஸ்தானமாகும். அந்த ஸ்தானத்துக்கு ஜஸ்டிஸ்காரர் வரவில்லையானாலும் தேர்தல் அபேக்ஷகராகும் வரை ஜஸ்டிஸ் கட்சிக்காரராய் ஜனங்கள் மதித்தவரும், பார்ப்பனர்களுக்கு எதிரியாக இருப்பதாய் சொல்லிக்கொண்டிருந்தவரும், ஜஸ்டிஸ்கட்சி சார்பாய் நிறுத்த யோசித்துக்கொண்டிருந்தவரும் தேர்தலில் பார்ப்பனத்தொல்லை இல்லாமல் இருப்பதற்காக பயந்து கையெழுத்துப் போட்டவரும்தான்— கொள்கையோ, அரசியல் காரணங்களோ பிரச்சினையாக இல்லாமல்சொந்தக் காரணங்களை முன்னிட்டு ஏற்பட்ட மனத்தாங்கலின் பலனாய் சுவாதினம் செய்துகொள்ளப்பட்ட ஒரு பார்ப்பனரல்லாதார் தான் வெற்றி பெற்றிருக்கிறாரே ஒழிய ஒரு நிஜமான காங்கிரஸ் வாதியோ, அல்லது ஒரு பார்ப்பனரோவந்துவிட்டதாகச் சொல்ல முடியாது.

அன்றியும் இந்தமூன்றுநான்கு மாதமாய் நடந்து வந்த மற்ற அதாவது ஜில்லா போர்ட், முனிசிபாலிட்டி, கிராமப்பஞ்சாயத்து அர்பன்பாங்கு முதலிய பல தேர்தல்களில் கூட அனேக வற்றில் காங்கிரஸ்காரர்கள் 100 க்கு 100 வீதம் முறியடிக்கப்பட்டிருப்பதும் பார்ப்பனர்கள் வாசனையே இல்லாமல் செய்யப்பட்டிருப்பதுமானபெருவாரியான தேர்தல்முடிவுகள்யாரும்அறியாததாஎன்றுகேழ்க்கின்றோம்

ஏதோ உள் சண்டைகளினாலும், சிலரின் முக்கியமாக சுயநலத்துக்காக செய்யப்பட்டதுரோகங்களினாலும், வஞ்சனை சூட்சி ஆகியவைகளினாலும் ஒரு சமயத்தில் வெற்றி என்பது கிடைத்துவிட்டால் அதற்காக இவ்வளவு தலைகொழுப்பும், ஆணவமும் காட்டப்படுவது என்பது இவ்வித சிறு வெற்றிக்கும் கூட காங்கிரஸ்காரர்களோ, பார்ப்பனர்களோ சிறிதும் யோக்கியதை உடையவர்கள் அல்ல என்பதைக் காட்டுகிறதே ஒழிய வேறு ஒன்றும் இல்லை.

இந்த வெற்றியினால் பார்ப்பனரல்லாத சமூகத்துககுக்கடுகளவாவது கெடுதி ஏற்பட்டு விடுமென்றோ,ஜஸ்டிஸ்கொள்கைக்கு ஏதாவது மோசம் வந்துவிடுமென்றோ யாரும்பயப்படவேண்டியதில்லை. என்பதோடு இனி மேலால் நடக்க வேண்டிய காரியங்களுக்கும் மெத்த அனுகூலம் ஏற்பட வழி ஏற்பட்டது என்றே கூறுவோம்

---

## "குடி அரசு"

அடுத்த வாரம் அதாவது ஜனவரி மாதம் 6 ந்தேதி வெளியாகும் பத்திரிகை "குடி அரசு" என்னும் பேரால் (அது நின்றுபோன 9-வது மாலை 22-வது மலரிலிருந்து 23-வது மலராக) வெளியிடலாம் என்று கருதி இருக்கிறோம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அவசரமாய் நடைபெறுகின்றன. தபால் அதிகாரிகள் அனுமதி அவசரமாய் எதிர்பார்க்கப்படுகிறது.

---

## எழுத்தில் சீர்திருத்தம்.

தமிழ்பாஷை எழுத்துக்கள் வெகுகாலமாகவே எவ்வித மாறுதலும் இல்லாமல் இருந்து வருகின்றன.

உலகில் உள்ளபாஷைகள் பெரிதும் சப்தம்,குறி,வடிவம்எழுத்துக்கள்குறைப்பு, அவசியமான எழுத்துக்கள் சேர்ப்பு ஆகிய காரியங்களால்மாறுதல் அடைந்து கொண்டேவருகின்றன.

கால வர்த்த மானங்களுக்கு ஏற்பபாஷைகளும், சப்தங்களும், உச்சரிப்புகளும், வடிவங்களும் மாறுவது இயல்பேயாகும்

வார்த்தைகள் கருத்தை வெளியிடுவதற்கு ஏற்பட்டவைகள் என்பதுபோலவே எழுத்துக்கள் சப்தத்தை உணர்த்த ஏற்பட்டவைகளேயாகும்.

ஆனால் நம்பண்டிதர்களுக்குதாராளமாய் அறிவைச் செலுத்த இடமில்லாமல் மதம் பழக்க வழக்கம் ஆகியவைகள் குறுக்கிட்டு விட்டதால் எழுத்துக்களுக்கும் அதன் கோடுகளுக்கும், வடிவங்களுக்கும் தத்து வார்த்தம் கற்பிக்கவேண்டிய அவசியமேற்பட்டு எழுத்துக்களையே தெய்வமாகவும், தெய்வ வடிவமாகவும் கருதவேண்டிய நிலை நம் நாட்டில் ஏற்பட்டு விட்டது.

தற்காலம் எத்தனையோ புதிய வார்த்தைகள் வந்து நமது தமிழ் பாஷையில் புகுந்து கொண்டன. அவைகளை இனி விலக்கமுடியவே முடியாது. விலக்குவதும் புத்திசாலித்தனமாகாது.அப்பேர்ப்பட்ட வார்த்தைகளை சரியானபடி உச்சரிக்கநமக்குப்பழக்கத்தில் எழுத்துக்கள் இல்லாமல் பாஷையையும் உச்சரிப்பு அழகையும் கொலை செய்கின்றோம். விஷ்ணு என்பதை விட்டுணு என்றும், விண்டு என்றும் உச்சரிப்பதில் பெருமை அடைகின்றோம், பாஷாபிமானப் பட்டமும் பெறுகின்றோம். அதற்கு இலக்கணம்இருக்கிறது.என்கின்றோம். அதோடு சப்தங்கள் மாறி விடுவதால்கருத்தும், அருத்தமும் மாறுவதில்லை என்றும் கருதுகிறோம். அதுபோலவே சில எழுத்துக்கள் பழைய பழக்கம்,

வழக்கம் என்பதற்காக மாற்றக் கூடாது என்று இல்லாமல் சௌகரியத்துக்காக மாற்ற வேண்டியது அவசியம் என்றால் அறிஞர்கள் அதற்கு இடம் கொடுத்துத் தான் ஆகவேண்டும்,

சுமார் 70, 80 வருஷகாலத்துக்குமுந்திய பதிப்புகளிலும், எழுத்துக்களிலும் ஈ என்கின்ற எழுத்தானது இ எழுத்தையே மேலே சுழித்த வட்ட வடிவத்தில் இருந்து வந்திருக்கிறது.

இன்னும் 400, 500 வருஷங்களுக்கு முந்தின கல் எழுத்துக்கள் அனேகம் வேறுவடிவத்தில் இருந்திருக்கிறது. இப்பொழுது அவைகள் மாற்றமடைந்ததற்கு காரணங்கள் கேட்பாருமில்லை, சொல்லுவாரும் இல்லை அதனால் சப்தமோ, அருத்தமோ, பாஷையின் அழகோ கெட்டுப்போனதாகக் குறை கூறுவாரும் காணப்படவில்லை,

அதுபோலவே இப்போதும் சில எழுத்துக்களின் வடிவங்களை மாற்றவேண்டியதும், சில எழுத்துக்களை குறைக்க வேண்டியதும், சில குறிகளை மாற்றவேண்டியதும் அவசியம் என்றும், அநுகூலம் என்றும் பட்டால் அதைச்செய்ய வேண்டியது தான் அறிவுடைமையே ஒழிய அதன் தத்துவார்த்தத்துக்கு ஆபத்து வருகின்றதே என்பது அறிவுடைமையாகாது என்பது நமது கருத்து.

ஆகவே இப்போது ணா, றா, னா, ஆகிய எழுத்துக்களும், ணை, லை, ளை, னை, ஆகிய எழுத்துக்களும் மற்ற கா. நா. ரா முதலாகிய எழுத்துக்களைப் போலும் டை, ஞை, ழை, முதலிய எழுத்துக்களைப் போலும், ஆகாரத்துக்கு ா குறியையும் ஐகாரத்துக்கு ை குறியையும் பெறாமல் தனி வடிவத்தைக் கொண்டு இருப்பதை மாற்றி ணா. றா. னா, ணை. லை ளை னை போல உபயோகித்து பிரசுரிக்கலாம் என்று கருதியிருக்கின்றோம். இதன் பயனாய் அச்சு கோர்ப்பதற்கு எழுத்துக் கேசுகளில் (அறைகளில்) 7 கேசுகள் (அறைகள்) குறைகின்றன என்பதோடு பிள்ளைகளுக்கும் இந்த ஏழு எழுத்துக்களுக்கு தனி வடிவம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போகும். சவுகரியம் ஏற்படுகின்றது.

இன்னமும் தமிழ் பாஷை எழுத்துககளில் அனேக மாறுதல்கள் செய்ய வேண்டி இருந்தாலும் இப்போதைக்கு இந்த சிறு மாறுதலை அனுபவத்திற்குக் கொண்டு வரலாம் என்று கருதி அந்தப் படியாகவே எழுத்துக்களை உபயோகித்து அடுத்தாப்போல் பிரசுரிக்கப்போகும் "குடி அரசு" பத்திரிகையைப் பிரசுரிக்கலாம் என்று இருக்கிறோம்.

இதை வாசகர்களும் மற்றும் தமிழ் பாஷை பத்திரிகைக்காரர்களும், தமிழ் பண்டிதர்களும் ஆதரிப்பார்கள் என்றும் எதிர் பார்க்கிறோம்.

---

## தோழர் சிவலிங்கம் மரணம்.

நமது நண்பரும், சுய மரியாதை இயக்கப் பிரமுகருமான ஜலகண்டாபுரம் தோழர் சி. கு. சிவலிங்கம் அவர்கள் 22-12-34ந் தேதி தமது 58-வது வயதில் காலஞ் சென்றாரென்ற செய்தி கேட்டதும் திடுக்கிட்டுப் போனோம்.

தோழர் சிவலிங்கம் அவர்கள் வயது சென்ற வராயிருந்தாலும் அங்குள்ள சுயமரியாதைத் தோழர்கட்கு ஊக்கமளித்து சுயமரியாதைப் பிரசாரம் செய்து வந்தார். இவர் ஜலகண்டாபுரம் யூனியன் போர்ட்டிற்கு ஆறாண்டு தலைவராக விருந்து பல அரிய வேலைகள் செய்து வந்தார். இப்படிப்பட்ட பெரியார் காலஞ்சென்றதற்கு வருந்துவதுடன் நமது அனுதாபத்தை அவர் குடும்பத்தாருக்கும், அவருடைய நண்பர்கட்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

## பரதூர்

ஜனவரி ௴ மத்தியில் பரதூர் வாலிபர் சுயமரியாதைச் சங்க ஆண்டு விழாவும், சோம சுந்திரன் வாசகசாலைதிறப்புவிழாவும், சங்கக் கட்டிட அஸ்திவாரக்கல் நாட்டு விழாவும் நடத்த வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது.

தோழர்கள் ராமசாமி, முத்துசாமி வல்லத்தரசு, நம்பிக்கைமேரி, பொன்னம்பலம், ஜீவானந்தம் முதலியவர்கள் வருவார்கள்.

---

## சுயமரியாதை இரவு பாடசாலை.

சென்னை சிந்தாதிரிப்பேட்டையிலிருக்கும் ஷை பாடசாலையின் ஆண்டுவிழாவை ஜனவரி மாதம் முதல் தேதியில் நடக்குமென தெரியப்படுத்தியிருந்தோம். அதை ஜனவரி மாதம் 28-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை ஒத்தி வைத்திருக்கிறதெனத் தெரியப்படுத்திக்கொள்கிறோம் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

# ஜஸ்டிஸ் கட்சியும், எதிர்காலத் திட்டமும்.

### தோழர் வி. வி. ராமசாமி அறிக்கை.

)o(

சென்ற இந்திய சட்டசபைத் தேர்தல் முடிவடைந்த ஒரு மாத காலமாக ஜஸ்டிஸ் கக்ஷியைத் திருத்தி அமைத்து கட்டுப்பாட்டுடன் பலப்படுத்துவதற்கு உடனே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கக்ஷியைச் சேர்ந்த அனேகரிடம் ஆத்திரம் குடிகொண்டிருந்தும் தலைவர்கள் எவரேனும் இது விஷயமாக நடவடிக்கை நடத்த முன் வராதது விசனிக்கத் தக்கதே. வெளி ஜில்லாக்களில் உள்ள மக்களிடம் கொதிப்பும், புதிய உணர்ச்சியும், பரபரப்பும் ஏற்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளினால்வெளி வந்துகொண்டேயிருக்கின்றன. இது சமயம் சென்னையில் உள்ள தலைவர்கள் வழிகாட்ட முன் வராமல் இருப்பது பெரிதும் பொருப்பற்ற காரியமாகும்.

முக்கியமாக நமது கக்ஷிக்கென்று, தாய் மொழி தினசரிப் பத்திரிகைகள் உடனே ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும், ஒரு மாகாண விசேஷ மகாநாடோ, அல்லது பல பாகங்களிலும் உள்ள தலைவர்களின் கூட்டம் ஒன்றோ உடனே தேவை என்பதும் பொதுமக்களின் அவா என்று தெரிகிறது. இத் தருணம் தக்க சமயம் என்று கருதுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விட்டால் பொதுஜனங்களுக்குக் கக்ஷியில் உள்ளபற்றுதலும், நம்பிக்கையும் சிதறுண்டு போகும் என்பதில் ஐயமில்லை. மேலும் நமது கொள்கைகளுக்கு நாட்டில் இடமில்லாமலும் போய் விடும்.

ஆகையால் மேலே கண்ட விஷயங்களை ஆராய்ந்து முடிவு செய்து தலைவர்களை ஒன்றாகக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்வதற்காக விருதுநகர் தென் இந்திய நல உரிமைச் சங்கக்களை ஸ்தாபனத்தின் கூட்டம் ஒன்று 30-12-34ந் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். கூட்டத்தின் முடிவு விபரங்கள் பின்னால் அறிவிக்கப்படும்.

வி. வி. ராமசாமி
விருதுநகர் முனிசிபல்
சேர்மன்

---

## பரம்பக்குடி பஞ்சாயத்து போர்டு தேர்தல்.

### தோழர் வேங்கிட்டராம் வெற்றி!

சென்ற 10-11-34ந் தேதி பரமக்குடி பஞ்சாயத்து போர்டு தேர்தல் நடந்தது. பரமக்குடி பஞ்சாயத்து போர்டு சில ஆண்டுகளாக வக்கீல் கோபாலையங்கார் தலைமையில் நடந்து வந்தது. ஷையார் நிர்வாகம் பொது மக்களுக்குப்பொதுவாக பிராமணரல்லாதவர்களுக்கு திருப்தியற்றதாகவேஇருந்துவந்தது. இந்த ஆண்டு ஷை போர்டுக்கு பரமக்குடி வாசியும், கோவாப் ரேட்டிவ் யூனியன் காரியதரிசியும், பொதுஜன சேவையே தன் நோக்கமாக கொண்டவருமான தோழர் வி. பி. ஜே. வெங்கட்ராம் அவர்களை தலைவராக்க வேண்டுமென்று அநேகர் விரும்பி ஷையாரை தலைவர் பதவிக்கு நிறுத்தினார்கள். ஷையாருக்கு போட்டியாக தோழர் கோபாலய்யங்கார் நின்றார். அவரைப் பொது மக்கள் விரும்பாததால் தோழர் வெங்கிட்டராம் அவர்கள் அதிக ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டாரென தோழர் ஆறுமுகம் எழுதுகிறார்.

---

## தோழர் ராமசுப்பிரமணியம் உடல் நிலை.

திருச்சி தோழர் ராம சுப்பிரமணியம் அவர்களுக்குப்பத்து தினங்களாக பல் நோயினால் கன்னத்தில் வீக்கம் ஏற்பட்டு ஜுரத்தினால் மிகுந்த உபாதையாயிருந்து சிகிச்சை செய்து இப்பொழுது குணமாயிருக்கிறது.

# கிறிஸ்துமஸ் வெகுமதிகள்

)o(

## அமெரிக்காவில் "கடவுளால்" அருளப்பட்டது

### தீயால் தாய், குழந்தைகள் கதி

### பாயிலர் வெடித்தது
### 13 பேர்கள் மாண்டனர்
### பிரேதங்கள் பறந்த கோலம்

மாண்ட்காமெரியில் (மேற்கு வர்ஜீனியா) ஓர் ரயில் வண்டியின் பாயிலர் வெடித்ததால் 13-பேர் மாண்டனர். 35-பேர்கள் காயமடைந்தார்கள். அந்த வண்டியில் 350-சுரங்கத் தொழிலாளர்கள் வேலைக்குச் சென்று கொண்டிருந்தனர். வெடித்த வேகத்தில் நாலா பக்கங்களிலும் பிரேதங்கள் சிதறி விழுந்தன.

### 160-பேர்களுக்கு மேல் மாண்டனர்.

கிறிஸ்துமஸ் பண்டிகையில் அமெரிக்காவிலுள்ள பலவிடங்களிலும் நேர்ந்த விபத்தில் சுமார் 166 பேர்கள் வரை மாண்டனர். சிகாகோவில் ஒரு எக்ஸ்பிரஸ் ஒரு மோட்டார் மீது மோதியதால், அதிலிருந்த 7 பேர்கள் மாண்டனர். ஷை விபத்தால் ரயில் வண்டியின் இன்ஜின் தண்டவாளத்தை விட்டுக் கீழே இறங்கி விட்டது. ஆனால் பிரயாணிகள் எவருக்கும் காயமேற்படவில்லை.

### 'கிறிஸ்துமஸ் மரம்' எரிந்தது.

ஸெடாலியா 'கிறிஸ்துமஸ் மரம்' ஒன்றில் தீப்பிடித்துக் கொண்டதால், ஒரு பெண்ணும், அவளுடைய 3 குழந்தைகளும் எரிந்து மாண்டனர்.

---

## பல்லடத்தில் பானகல் தினம்.

மேற்கு பல்லடத்தில், தோழர் எஸ் ஏ. மாணிக்கம் அவர்கள் இல்லத்தில் 23-12-34 தேதி மாலை 6 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும், பல தோழர்களும், பெண்களும், மாணவர், மாணவிகளும், வந்து குழுமியிருந்தனர் ஷை கூட்டத்திற்கு தோழர் கே. டி. சம்பந்தம் அவர்கள் தலைமை வகித்தார், மாணவர்களால் கீதம் பாடப்பட்டது. தலைவர் முகவுரை கூறியபின் தோழர் எஸ். பி. கே. தேவர் அவர்களும், தோழர் எஸ். ஏ. மாணிக்கம் அவர்களும், பானகல் அரசரும், தமிழர் இயக்கமும் என்னும் பொருள் பற்றி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

தீர்மானங்கள்:—

1. மாகாண நிருவாகக் கமிட்டி மகாநாட்டை விரைவில் கூட்டி கட்சியின் ஆக்கவேலைகளையும், திட்டங்களையும் தயாரிப்பதுடன், தோழர் ஈ. வெ. ரா. அவர்களின் திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவரவேணுமாய் கனம் பொப்பிலி அரசரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது என்ற தீர்மானத்தை, எஸ். பி. கருப்பண்ணன் பிரரேபிக்க, கே. ஜே. மைதீன்கான் ஆமோதிக்க நிறைவேறியது.

2. தமிழரின் சமத்துவத்திற்கும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கும், உழைத்து வரும் தோழர் கே. எம். பாலசுப்பிரமண்யம் பி, ஏ, பி, எல்., அவர்களை இந்திய சட்டசபைக்கு நாமினேஷன் அங்கத்தினராக நியமனம் செய்யுமாறு, மேன்மை தங்கிய வைஸ்ராய் அவர்களையும், மேன்மை தங்கிய கவர்னர் அவர்களையும் கேட்டுக் கொள்ளுகிறது. என்ற தீர்மானத்தை பி. ஒ. பீ. அமீர் பிரரேபிக்க, கே. எம். பொன்னு, என். முத்துச்சாமி ஆகிய இருவர் ஆதரிக்க ஏகமனதாக நிறைவேறியது.

பின் தலைவர் தன் முடிவுரையில் புதியதோர் உணர்ச்சியை ஊட்ட வல்லதுமாக, நீண்ட நேரம் உபன்யாசிக்கப்பட்டு, யாவருக்கும், சிற்றுண்டிம்யு தேனீர் விருந்தும், தாம்பூலமும் தோழர் எஸ். ஏ. மாணிக்கம், அவர்களால், வழங்கப்பட்டு, தலைவருக்கு மலர் மாலை, சூட்டப்பெற்று யாவருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

(ஒரு நிருபர்)

---

## வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கு நன்கொடை.

காலஞ்சென்ற தோழர் வி. தியாகராயமுதலியார் அவர்களின் 16ம்நாள் சடங்கு வெகு விமரிசையாக வாலாஜாபாத்தில் நடைபெற்றது. அது சமயம் பல தோழர்கள் உபன்யாசங்கள் செய்தார்கள். பிற்பகலில் சுமார் 4000-ஏழைகளுக்கு சாப்பாடு போடப்பட்டது. சாயங்காலம் 3-30மணிக்குக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குத்தோழர் எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார். அதில் தோழர் பஞ்சாட்சர முதலியார் அவர்கள் தனது தந்தை இறந்த ஞாபகார்த்தமாக "தியாகராயமன்றம்" என்று வழங்கப்படும் கட்டிடத்தை வாலாஜாபாத் இந்து மத பாடசாலைக்கு நன்கொடையாகக் கொடுத்து விட்டார். அதன் பிறகு பல தோழர்கள் கட்டிடத்தை நன்கொடையாகக் கொடுத்ததைப்பற்றிப் பேசியதோடல்லாமல் அதன் பால் தங்களது மனப்பூர்வமான வந்தனோபசாரத்தையும் செலுத்தினார்கள். தோழர் வி. கல்யாண சுந்திரமுதலியார் அவர்கள் "மரணத்துக்குப்பின் ஜீவன்" என்பது பற்றியும், தோழர் கே. சுப்பிரமணியம்பிள்ளை அவர்கள் "ஜீவன் ஒரு மாயை" என்பது பற்றியும் சொற்பொழிவு வாற்றினார்கள். தலைவர் முடிவுரையாகப்பேசுகையில் அங்கு பேசப்பட்ட பல விஷயங்களைக் குறித்து உருக்கமான ஒரு பிரசங்கம் செய்தார். கூட்டத்திற்கு முக்கியமான பிரமுகர்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். கடைசியாக தலைவருக்கு பாடசாலை மாணவர்களால் வந்தனம் கூற கூட்டம் 7மணிக்கு கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## பிராமணரல்லாத வாலிபர் சங்கம். திருப்பத்தூர்.

ஷை சங்கத்தின் அவசரக்கூட்டம் 24-12-34ந் தேதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு பிரபல வர்த்தகர் தோழர் எ. சின்னசாமி அவர்கள் தலைமையின் கீழ் கூடி கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

நிறைவேறிய தீர்மானங்கள்:

தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அட்வகேட் அவர்களை சென்னை மாகாணத்தின் சார்பாக இந்தியா சட்ட சபைக்கு நியமனம் செய்யும்படி வைசிராய் அவர்களையும், சென்னை கவர்னர் அவர்களையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாககமிட்டிக்கூட்டத்தை இம்மாத கடைசிக்குள் கூட்டுவித்துதோழர் ஈ. வெ. ரா. அவர்கள் திட்டத்தை ஒப்புக்கொண்டு கட்சிக்கு மேல் கொண்டு செய்யும் வேலைகளை துரிதமாகச் செய்யும்படி பொப்பிலிராஜா அவர்களையும், கட்சியின் பிரமுகர்களையும் கேட்டுக்கொள்கிறது.

நம்முடைய சங்கத்தின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தமிழ் நாடு, பகுத்தறிவு, பத்திரிக்கைகளை ஆதரிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறது. என்றும், இன்னும் சில தீர்மானங்க்ள் நிறைவேறிய பின் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## ஜலகண்டாபுரம் தோழர் சி. கு சிவலிங்கம் மறைவு.

சென்ற 22-12-34ந் தேதி இரவு 12-மணிக்கு இவ்வூர் ஜஸ்டிஸ்—சுயமரியாதை இயக்கங்களின் பிரமுகரான, பெரியார் தோழர் சி. கு. சிவலிங்கம் அவர்கள் தமது 58-வது வயதில், காலஞ்சென்றார். இவர் ஆரம்பத்தில் 6 வருடங்களாக இவ்வூர் நகரசபைக்குத் தலைமை வகித்து, திறம்பட பொதுஜன சேவை செய்துள்ளார். பல முக்கிய பிரபலஸ்தர்களுடைய சிநேகமும், அறிவும், ஆராய்ச்சியும் படைத்தவர் ஆரம்பத்தில் பழுத்த சைவராகவும் அந்த முறையில் இவ்வூர் "சன்மார்க்க சபை"யின் தலைவராகவுமிருந்து, யாருடைய தூற்றலுக்கும் அஞ்சாமல் தீவிரமாக ஜஸ்டிஸ்—சுயமரியாதை இயக்கங்களிலும்ஈடுபட்டவர், அதற்காகத் தொண்டு செய்தவர். இவர் சைவ சமயத்தில் நீண்ட கால ஆராய்ச்சியுடையவராதலின், பண்டிதர்களிடம் வாதம் புரிந்து அறிவியக்கத்தைப் புகுத்துவதில் நிபுணர், இப்பெரியாரது மறைவு இவ்வூர் சுயமரியாதைத் தொண்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் பெருத்த நஷ்டமாகும்.



காலஞ்சென்ற தோழர் சி. கு. சிவலிங்கம் ஜலகண்டாபுரம் சுயமரியாதை இயக்கப் பிரமுகர்

---


### ஒயிட்ஸ் பஸ்பம்.

பாதரசத்தினால் தயாரிக்கப்பட்டது. மூத்திர சம்பந்தமான வெள்ளை வெட்டை ரணம் உள் மூலம் வெளி மூலம் ஆப்ரேஷன் இல்லாமல் குணத்திற்கு உத்திரவாதம். 12-வேளை மருந்து ரூ. 1—2—0 வீ. பி. சார்ஜ் வேறு.

ஒயிட்ஸ் வைத்திய சாலை,
அம்மாபேட்டை சேலம்.

8-ம் பக்கத் தொடர்ச்சி

டவை. இம் மாகாணத்தைப் பொருத்த வரையிலாவது அவைகளிலும் இம் முறை கையாளப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த இரு அரசாட்சியாருக்குங் கீழ்படாத ஹைகோர்ட்டிலும் இந்த முறை ஆளப்பட வேண்டும். இது மாத்திரம் போதாது, அரசாட்சிப் பண உதவியால் நடைபெறும் தனிஉடமைப் பள்ளிக்கூடங்களிலும் இம் முறை கையாளப்பட வேண்டும் அப் பள்ளிக்கூட ஆட்சி தனிப்பட்ட ஒருவரிடமிருந்தாலும், அப் பள்ளிக் கூட்டம் ந. ப்பது பொதுப் பண உதவியால். சில இனப் பிள்ளைகள் படியாத் பள்ளிக்கூடத்திற்கு அரசாட்சிப் பண உதவி கிடையாது என்று சொல்ல எவ்வளவு நீதியுப், உரிமையுங் உண்டோ, அதற்கு மேலாகவே இம் முறையை வற்புறுத்துவதற்கு அரசாட்சியாருக்கு உரிமையும், நீதியுமுண்டு. இதைப்புறக் கணித்தால் அவர்கள் தன் கடமையில் தவறியவர்களாவார்கள். ஆதிதிராவிடர் பிள்ளைகள் படிக்க வேண்டுமென்று வற்புறுத்தி ஒரு முதலாளியின் மாட்டு மேய்ச்சி பிள்ளையையோ, குதிரைக்காரன் பிள்ளையையோ பள்ளிக்கூடத்தில் சேர்ப்பிப்பதால் அவர்களிடமுள்ள கல்வியில்லா இருள் மாறிவிடாது. ஆனால் அப் பள்ளிக்கூடத்தில் ஆறு வாத்தியாயர்களில் ஒருவர் ஆதிதிராவிடராயிருப்பாரானால், ஆதிதிராவிடப் பிள்ளைகள் ஏராளமாக வந்து சேருவார்கள். இப்படியே மற்ற இனத்திலும் இப்படிச் செய்வதால் பொதுப் பணத்தில் தனக்குரிய வேலையை ஒவ்வொரு இனத்தாரும் அடைவதுடன், அவ்வினப் பிள்ளைகள் படிப்பதற்கும் எளிய வழியாகும் கடைசியாக இன்னொன்று, நீதிமன்றங்களில் வாது புரியும் வழக்கறிஞர்களும் இவ் விகிதப்படியே இடங்கொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நீதி மன்றத்திலும் இத்தனை பெயர் தான் வாது புரியலாம் என்று உத்திரவிட அரசாட்சியாருக்கு உரிமை ஏற்படுத்திக்கொள்வதில் புதுமையோ, நீதிக்குறையோ ஒன்றும் இல்லை. அப்படிக் குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஒவ்வொரு இனத்திற்குமுரிய விகிதத்தை வற்புறுத்துவது மேற்சொன்ன நீதியின் பாற்பட்டதே யாகும். இப்படி இன விகிதம் ஏற்படுத்துவதில் ஒருவருக்கும் இரக்கங்காட்டியதாகாது. அவரவர்களுக்குரிய உரிமையை அவரவர்களுக்குக்கொடுத்ததே ஆகும். ஒவ்வொரு வேலைக்கும் இன்னின்ன படிப்பு முதலியவை இருக்க வேண்டுமென்று சொல்வதற்கு யாரும் பின்வாங்க வேண்டாம். அப்படிப்பு முதலிய உரிமைகள் உள்ளவர்கள் இருக்கும்பொழுது, ஒவ்வொரு இனத்தாருக்கும் அவரவர்கள் உரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது தான் வற்புறுத்தப்படுகிறது.

4. நீதிக் கட்சி துவக்கப்பட்ட பொழுது எப்படி சட்டசபையில் இட உரிமை எண்ணிக்கையை நிலை நாட்டினார்களோ, அதே மாதிரி இனி மேலே சொன்ன மாதிரி பொதுப் பண வேலைத் துறைகளிலும், இன, உரிமை எண்ணிக்கை, மேலே விளக்கப்பட்டபடி நிலை நாட்டுவது நீதிக் கட்சியின் வருங்கால முதல் வேலையாக இருக்கவேண்டும். அப்படிச் செய்தால் நீதிக கட்சி நாட்டில் ஓங்கி வளரும். விரிந்த தொண்டு செய்ததாகும். நீடித்த வளர்ச்சி பெறும் இதைப் புறக்கணித்தால் நீதிக் கட்சி வளர்ச்சியில் குன்றி இளைத்துப் போகும். இவ்வழியில் அவர்கள் காட்டும் ஊக்கம் அடுத்த மாகாணத் தேர்தலில் அவர்களின் வெற்றிக்கு ஒரு அளவு கோல கும்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ரால் தேசத்தின் கதி என்னவாகுமென்பதைச் சிந்தனை செய்து பாருங்கள். அதிகாரம் அத்தகைய தலைவர்கள் கைக்குப் போகாமல் தடுக்க வேண்டுமென்பதே ஜஸ்டிஸ் கட்சியின் பிரதான நோக்கம்.

ஆகையால் நாம் எத்தகைய குழப்பத்திலும் நமது உயரிய நோக்கத்தைக் கடைப்பிடித்தொழுக வேண்டும். அது விஷயத்தில் நாம் அஜாக்கிரதையாயிருத்தல் கூடாது. வீணான சண்டைக்கும், பொறாமைக்கும் மன வருத்தங்களுக்கும் கட்சி இடந்தருதல் கூடாது. கட்சி பிற்போக்கடைவதை நமது முழு பலங்கொண்டு தடுத்து நிலைமையை நாம் சமாளித்துக் கொள்ள வேண்டும். நமது தோல்விக்குக் காரணமாயிருந்த நிலைமைகளை அறவே மாற்றிவிட முயற்சி செய்ய வேண்டும். நமது மேம்பாட்டிற்குரிய கட்டுப்பாடுகளை ஆங்காங்கு அமைத்தல் வேண்டும். சென்றுபோன விஷயங்களில் நாம் அடைந்த அனுபோகங்களை இனி நமது வருங்கால முன்னேற்றத்திற்கு உபயோகித்துக் கொள்ள வேண்டும். இனி நம்முள் ஒருவர் ஒருவர் மேல் குறைசொல்லிக் கொண்டு காலங்கழிக்க நமக்கு அவகாசமில்லை. ஆகையால் இனி நமது சட்சியின் ஆணித்தரமான ஸ்தாபகத்திற்குரிய முயற்சிகளையெல்லாம் நாம் தளராது செய்து வரவேண்டும். ஜஸ்டிஸ் கட்சியில் பிராமணரல்லாதாருக்கு ஏற்பட்டிருக்கும் நன்மைகளைப்பற்றி அறியாதார் யாருமில்லை. அது போலவே இனியும் அக்கட்சியைப் பலப்படுத்தி அதனால் மக்கள் முழு நன்மையடையக்கூடிய மார்க்கங்களைக் காணவேண்டும்

நாம் நமது கட்சியின் பிரசாரத்தின் பொருட்டு தேச பாஷைகளில் தினசரிப் பத்திரிகைகளையும், வாரப் பத்திரிகைகளையும், மாத சஞ்சிகைகளையும் நடத்த வேண்டும். தமிழ் நாடு முழுவதும் தீவிரப் பிரசாரங்கள் செய்து வரவேண்டும். நமது மதத்திலும், சுயேச்சை இயக்கத்திலும், சுயமரியாதைக் கொள்கையை மேற்கொள்ள வேண்டும். அரசியல் துறைகளில் தாராளமாய் இறங்கி வேலை செய்யவேண்டும். ஜில்லாக்கள் தோறும் பிராமணரல்லாதார் மகாநாடுகளைக் கூட்ட வேண்டும். தீர்மானங்களை ஒழுங்காய் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். சட்டசபை முதலிய ஸ்தல ஸ்தாபனங்களில் தனித்தொகுதி முறையை அனுஷ்டிக்கும்படி செய்யவேண்டும். பல வித நிர்வாக அதிகாரங்களிலும், வகுப்புவாரி பிரதிநிதித்வம் கிடைக்கும்படி செய்ய வேண்டும். பார்ப்பனப் புரட்டுகளைக் கதைகளாகவும், நாடகமாகவும் வெளியிட வேண்டும். பல்லாயிரம் வருஷங்களாக பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதவர்களை அரசியல் விஷயத்திலும், மத விஷயத்திலும் அடிமைப்படுத்திக் கொடுமை செய்து வந்திருக்கிறார்கள் என்சதை நாம் ஞாபகப்படுத்திக்கொண்டு உஷாராயிருக்க வேண்டும். நமது தேசமும், சமூகமும் உண்மையில் முன்னேற்றமடைய வேண்டுமானால் ஜஸ்டிஸ் கட்சியைப் பலப்படுத்த நாம் பெருமுயற்சி எடுத்துத்தான் ஆகவேண்டும்.

ஆகையால் ஜஸ்டிஸ் கட்சியின் தற்கால வீழ்ச்சியையும், தலைவர்களின் அபிப்பிராயப் பேதங்களையும் கண்டு குழப்பமடைந்து கட்சி அபிமானிகள் யாவரும் நிதானம் விட்டு உற்சாகமிழந்துவிட வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

நகர தூதன்.

அதிர்ஷ்டம் ! அதிர்ஷ்டம் !!

நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் 3-வது

லாட்டரி.

| சீட்டு ஒன்றுக்கு கிரையம் | 1வது பிரைஸ் | 22 சீட்டுகள் அடங்கிய புஸ்த்தகம் கிரையம் |
| --- | --- | --- |
| ரூ. 1—0—0 | ரூ. 5,000 | ரூ. 20—0—0 |

2-வது பிரைஸ் ரூ. 2000. 3-வது பிரைஸ் ரூ. 1000.

இன்னும் 5997 பிரைஸ்கள் உண்டு.

10-12-34 தேதியில் பிரைஸ் எடுப்பதாக இருந்ததை, விற்பனையான புஸ்த்தகங்களை அநேகர் இன்னும் அனுப்பி வைக்காதபடியாலும், கொஞ்ச காலம் தள்ளி வைக்கும்படி கேட்டுக்கொண்டதாலும் 1935 வருஷம் ஏப்ரல் மாதம் 12ந்தேதி பிரைஸ் எடுப்பதென தீர்மானித்திருக்கிறது. புஸ்த்தகம் விற்பனை செய்துள்ள அபிமானிகள் 10-4-35 தேதிக்குள் அடிக்கட்டைகளையும் தொகையையும் அனுப்பிவைக்கக்கோருகிறோம்.

10-4-35 தேதிக்குப் பின் வரும் அடிக்கட்டைகளை (Counterfoils) பிரைஸில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.

Closing Date 10—4—35

Drawing Date 12—4—35

ஆபீஸ்:—
34, வெங்கலக்கடைத்தெரு,
மதுரை.

பெ. சி. சிதம்பரம்,
ஆ. அ. ஆறுமுகம்,
ஜெனரல் செக்ரட்டேரிகள்.

6-ம் பக்கத் தொடர்ச்சி

ராஜம்பாள் அவர்களைப் பிரேரேபிக்கப்பட்டது. பரிசு வழங்கும் அம்மையாருக்கு ஒரு மாணவி புஷ்பஹாரம் சூட்டிய பின், உபாத்தியாயர் ஜாப்தா வாசிக்க, தோழர் ராஜம்பாள் அவர்கள் தமது கரங்களால் பரிசுகள் வழங்கினார்கள். இது முடிந்ததும் இரு சிறுமிகள் கும்மி பாடினார்கள். இரண்டு சிறுவர்கள் மதுவிலக்குப் பாட்டையும், மற்றுமிரண்டு சிறுவர்கள் திருப்புகழ் சந்தப் பாட்டும் பாடி முடித்தனர்.

தலைவர் முடிவுரையில் இக்கலாசாலையை நிர்வகிக்கும் கோலக்கங்சார் தமிழர் சீர்திருத்த சங்கத்தினரையும், ஆசிரியரையும் பாராட்டித்தமிழபிமானிகளிடத்தில் அதன் நிர்வாகத்தை யுத்தேசித்துப் பொருளுதவி செய்யுமாறு வினயமாக வேண்டிக்கொண்டார்.

தலைவரவர்களின் முடிவுரைக்குப் பின் வரவேற்புக் கமிட்டியின் சார்பாக கே. நாகேசு அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்ட பின், வருடவிழா வைபவம் முடிவுற்று திரேகப் பயிற்சிக் காட்சிஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் திரேகப் பயிற்சிக் காட்சி மணி எட்டுக்கு ஆரம்பமாகியது. திரேகப்பயிற்சிக் காட்சிக்கு சுவாமி ஆத்மராம்ஜி அவர்கள் தலைமை வகித்து முகவுரைச் சொற்பொழிவில் பின் வருமாறு குறிப்பிட்டார்:—

திரேகப்பியாசம் மனித வர்க்கத்திற்கு இன்றியாமையாததென்றும், இந்தியர்கள் இயற்கையிலேயே தேக வலிமையுடையவர்களென்றும், ஆயினும் ஐரோப்பியர்கள் திரேகாப்பியாசத்திலும், தேக வலிமையிலும் தலைசிறந்து விளங்குகிறார்களென்றும் அதன் காரணத்தாலேயே அவர்கள் உலக நாடுகளில் அரசு செலுத்தும் வன்மை பெற்றுள்ளார்களென்றும், நமது எதிர்கால வீரர்களாகிய இளைஞர்கள் நன்கு தேக வலிமை பெற்று வருவதற்கு இப்பொழுதே ஊக்கமளிக்க வேண்டுமென்றும் கூறினார். பின்னர், கவாத்துப் பயிற்சிகள், பஸ்கிகள், குதிப்புகள், கயிறு விளையாட்டுகள் அபூர்வமான மூச்சுவேலைகள் முதலியவை காண்பிக்கப்பட்ட பின் திரேகப் பயிற்சி ஆசிரியர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு தோழர் எஸ். சொக்கலிங்கஞ் செட்டியாரவர்களால் அழகிய வெள்ளிக்கிண்ணமொன்று நன்கொடைப்பரிசாக அளிக்கப்பட்டது. தோழர் செட்டியார் அவர்களுக்கு தோழர் நாகேசு அவர்களால் புஷ்பஹாரம் சூட்டப்பட்டு சபையோருக்கு அறிமுகம் தசய்து வைக்கப்பட்டார்.

## தமிழர் சீர்திருத்த மகாநாடு.

காலது 2-12-34-ல் கோலக்கங்சாரில் நடைபெற்ற அகில மலாயா தமிழர் சீர்திருத்த நான்காம் மகாநாட்டை சுவாமிஆத்மாராம் ஜி அவர்கள் திறந்து வைத்தார். பிறகு ஸ்டிரெயிட்ஸ் எக்கோ பத்திரிகையின் ஆசிரியர் தோழர் எம். சரவணமுத்து அவர்கள் தலைமை வகித்து செய்த முகவுரைப் பிரசங்கம் சாரம்,

இம்மகாசபை கூடிய இச்சமயத்தில் என்னையும் ஓர் பொருட்படுத்தி என்னை அக்கிராசனாதிபத்தியம் வகிக்கக்கோரிய உபசாரத்துக்காக அகில மலாயா தமிழர் சீர்திருத்த சங்கத்தாருக்கு நான் என்றும் கடப்பாடுடையவனாகின்றேன். உலகிலுள்ள சாதியாரனைவரும் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலைமையை உற்று நோக்குவார்க்குப் பூர்வீக தமிழ் சாதியாரின் பழமைக்கும் பெருமைக்கும் பண்டைய சீனச் சாதியாரைத் தவிர மற்றச் சாதியாரும் ஒப்பு நோக்கத்தக்க சீர்திருத்த நிலைமையை எய்தியிருந்தாரல்லர் என்பது பூர்வீகச்சரித்திர சம்பன்னரின் ஆராய்ச்சியினால் வெள்ளிடைமலைபோலக் கொள்ளக்கிடக்கிறது.

இம்மகாசபையின் முதல்கூட்டம் 1929-ம்ஆண்டு டிசம்பர்மீ "ஈப்போ"வில் ஈரோடு தோழர் ஈ. வே. இராமசாமியார் திறந்து வைத்தார் டாக்டர் முகம்மதுகௌஸ்அவர்களது அக்கிராசனத்தின் கீழ் கூட்டப்பெற்றது. இரண்டாம் மகாநாடு 1931-ம் ஆண்டு மார்கழி மாதம் "பினாங்"கில் தைப்பிங்நகர் தோழர் வி கே. முருகேசம் பிள்ளை அவர்கள் திறக்கப்பட்டு தோழர் பெருமாள் நாடாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. மூன்றும் மகாசபை 1933-ம ஆண்டு மார்கழி மாதம் 'கோலாலம்பூரில் நகரப் பெரியார் எஸ். எல். எஸ் செட்டியப்ப செட்டியார் அவர்கள திறந்து வைக்க ஜி. குமாரசாமி தலைமையின் கீழ் நடைபெற்றது.

இந்நாலாவது மகாசபையானது அடுத்த இவ்வருஷாந்திரத்திலேயே குழுமியது "அகில மலாய தமிழர் சீர்திருத்த சங்கம்" சிறப்புற்றுச் செழித்தோங்குவதெ பதற்கு அறிகுறியாயிருக்கின்றதென்பதைப் பேரானந்தத்துடன் தெரிவிக்கின்றேன். வருஷாவருஷம் இச்சபை இப்படியே செழிப்புற்றோங்க வேண்டுமென்று விரும்புகிறேன.

தற்போது நாங்கள் சுயேச்சையால் இமலாய் நாட்டை எம்மதாகத் தெரிந்து வசிக்கின்றோம். இந்நாடோ சர்வ சாதியார்க்கும் உறைவிடமானது. சர்வசாதியாரும் சமத்துவ சகோதரத்துவம் அடைவதற்கே இப்பிறப்பில் எச்சாதியாரும் முயல வேண்டியவற்றின் முடிபும் முக்கிய பாக்கியமுமாகும். சர்வ சாதியாருங்கு குழுமிய இம்மலாய் நாட்டில் எம்மன்னோர் அபிவிர்த்திக்காகக் கொள்ளவேண்டியவற்றைக் கொண்டு தள்ள வேண்டியவற்றைத் தள்ளுவதே மேலாய் விளங்க அபேட்சிக்கும் யாபேர்க்கும் கடனாகு மென்க.

இனி, சமத்துவ சகோதரத்துவத்திற்கு முட்டுக்கட்டை போடுமவற்றுள்சாதி வித்தியாசமே முக்கியமானது.

பூர்வ காலத்தில் சாதி என்பது தொழிலினாலேற்பட்டதே யொழியப் பிறப்பினால் இயன்ற தொன்றன்று. ஆனதால், எம்முன்னோரின் மெச்சக்கூடிய பாகுபாட்டவற்றிற்காலத்துக்கு ஏற்பனவையே அனுபவத்துக்குக்கொண்டு, ஏலாதனவற்றை எற்புழி படிப்படியாக யாவர்க்குஞ்சமரசமாக ஒக்குமாறு ஆக்கிக் கொள்வதே தற்கால உலக நாகரீகத்துக்கு ஒப்புமானதாகும்.

### பத்திரிகைவேண்டும்.

இனி உத்தரகிரிகை, வதுவை முதலிய கருமாதிகளுக்குப் பாழுக்குப் பொருளிறைத்துச் சிவிய காலமட்டும் வட்டிக்குழைக்கவும் பட்டினி பிடிக்கவும் "யான், யான்" என்று தடபுடல்செய்ய இருப்பார் கண்களைத் திறக்க, ஓர் தமிழப் பத்திரிகையை இச்சபையில் ஆதரிக்க வேண்டும்.

### தீர்மானங்கள்.

1 மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினியார், பேரா சுல்தான், சுல்தானு அவர்களது நீடித்த வாழ்வை இம்மகாநாடு விழைகிறது-

இந்தத் தீர்மானத்தைத் தலைவர் பிரேரேபித்தார்.

2. மலாயவிற் குடியேறியுள்ள தமிழ் மக்களுக்குச் சாதி-சமய வேற்றுமையின்றிச் சம உரிமையளிக்கும்படி தொடுவாய்ப் பகுதி ஐக்கிய மலாய்நாட்டு அரசாங்கங்களையும், சமஸ்தான சபைகளையும் இம்மகாநாடு வேண்டுகிறது.

பிரரேபித்தவர்: உயர் திரு. சுவாமி அற்புதானந்தா

ஆமோதித்தவர்: திரு. வே. ஏ. சந்திரராசன்.

3. மலேயாவில் வதியும் தமிழருக்குத் தமிழ் கல்வியளிக்கவும், தமிழ் பள்ளிகளைப் பதிவு செய்வதன்றிப் பெருளாதார உதவி செய்ய வேண்டுமெனவும், தொடுவாய்ப் பகுதி, ஐக்கிய மலாய் நாடு ஐக்கியத்திற் சேராத மலாய்நாடுகளின் கல்வித் தலைவர்களை இம்மகாநாடு விநயமாய் வேண்டுகின்றது.

பிரரேபித்தவர்:—

ஜனப். ஹமீதுக்களஞ்சியம்.

ஆமோதித்தவர்:—

தோழர் ஜி. குமாரசாமி.

4. மலாய்நாட்டுத் தமிழ் மக்கள் கல்யாணம், ஈமச்சடங்கு முதலியவற்றில் வீண் செலவைக்குறைக்க வேண்டுமென்றும், சாதி சமய வேற்றுமையின்றித் தமக்குள் ஒற்றுமையை வளர்க்க வேண்டுமென்றும் இம் மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

பிரரேபித்தவர்:—

தோழர் சுவாமி ஆத்மராம்ஜீ

ஆமோதித்தவர்:—

தோழர் ஆர் ராமநாதன்.

தீர்மானங்களனைத்தும் நிறைவேறியபின்னர், பிற்காலத்தில் மகாநாடுகளை ஒழுங்காக நடாத்துவதற்காக, மகாநாடுகளின் சட்ட திட்டங்களை வகுப்பதற்காக கீழ்க்கண்ட ஐவரடங்கிய ஓர் உட்சபை நியமிக்கப்பட்டது.

தோழர்கள்சரவணமுத்துபினாங்கு, ஏ. டி. சுப்பையா ஈப்போ, ஏ. என்; பி ஹமீதுக்களஞ்சியம்பினாங்கு, கே. நாகேசு கோலக்கங்சார், வி. ஏ. சந்திராசன் கோலாலம்பூர், பின்னர் அடுத்த மகாநாடு பினாங்கிற்கும் கோலாலம்பூருக்கும் அழைக்கப் பட்டது.

## 3-வது அகில மலாயா சீர்திருத்த தமிழ்யுவர் மகாநாடு கோலகஞ்சார்.

இடைவேளை போஜனத்திற்குப் பின் மாலை 3-மணிக்கு தமிழர் சீர்திருத்த யுவர்மகாநாடுதுவங்கிற்று.தோழர் எம். ரத்னசாமிபிள்ளை தனதுஉருக்கமான வரவேற்புப் பிரசங்கத்தைச் செய்து முடித்தபிறகு பொதுக்காரியதரிசி பினாங் அட்வொகேட் தோழர் பி. சோமசுந்திரம் அவர்களை தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொள்ள தோழர் கே. நாகேசு அதை ஆமோதிக்க தோழர் பி. சோமசுந்திரம் அவர்கள் கரகோஷத்தினிடையெ தலைமை ஏற்று தனது தலைமைப்பிரசங்கத்தை தெள்ளிய தமிழில் பேசிமுடித்தார்.

### தீர்மானங்கள்.

(1) ஜாதி மத வேற்றுமைகளை அறவே களைந்தெரிந்து அதற்காக சமபந்தி போஜனம், கலப்புமணம், விதவை மணங்களைக் கையாளவேண்டுமென இம்மகாநாடு தமிழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

பிரரேபித்தவர்:—

தோழர் வேணுகோபால் நாயுடு.

ஆமோதித்தவர்:—

தோழர் அற்புதானந்தா.

(2) இத்தீர்மானம் தமிழர் கல்வி முற்போக்கைப்பற்றியதாகும்.

முதல் தீர்மானத்திற்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. சில திருத்தப் பிரரேபணைகளும் கொண்டு வரப்பட்டன. கடைசியில் அது வித்திட்ரா வாங்கிக்கொள்ளப்பட்டது.

இரண்டாம் தீர்மானம் விவாதம் யாதுமின்றி எளிதில் நிறைவேறிவிட்டது. பிறகு தலைவர் முடிவுரையானதும் வந்தனோபசாரத்துடன் இனிது கலைந்தது.

பிறகு மாலை 8-30மணிக்கு பாட்டுக்கச்சேரியுடன் மற்றொரு கூட்டம் ஆரம்பமாயிற்று அதில் கோலாலம்பூர் ஸ்ரீமதி ஜியான்ஜேகோப் என்பவர் 'அகிலமலாயா சீர்திருத்தப் பெண்கள் மகாநாட்டின் அவசியம்' என்னும் பொருள்பற்றி செந்தமிழில் உருக்கமானதொரு சொற்பொழிவாற்றினார். அதில் அவர் சமூகம் முன்னேற்றத்திற்குப் பெண்களின் முன்னேற்றமும், ஒத்துழைப்பும் மிகமிக அவசியம் என்றும், பெண்கள் தற்போது ஆண்களால் மிருகங்களிலும் கேவலமாக நடத்தப்படும் மாதிரியையும், பெண்கள் தங்களின் குறைபாடுகளை எடுத்துச்சொல்ல சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்றும், சமூக

முன்னேற்றத்திற்கு பெண்கல்வி மிகவும் முக்கியமென்றும் தெற்றனவும், ஆணித்தரமாகவும் பேசினார். சொற்பொழிவாளருக்கு வந்தனோபசாரம் கூறியவுடன் இரவு 8-15 மணிக்கு கூட்டம் முடிந்தது.

பிறகு 8-30 மணிக்கெல்லாம் மற்றொரு கூட்டம் துவங்கிற்று அக்கூட்டத்திற்கு தோழர் ராமநாதன் தலைமை வகித்தார். முன்னுரையாகப் பேசுகையில் மதவாதிகளின் பிடிவாத குணத்தைப்பற்றியும், மதக்காரர்கள் எவ்விதம் பாமரமக்களை ஏய்த்து அவர்கள்மேல் தங்களின் ஆதிக்கத்தைச் செலுத்துகிறார்கள் என்பதையும், மதங்களின் காட்டுமிராண்டிக்குணத்தையும், ஏழைகளுக்கு நாம் செய்ய வேண்டியது என்ன என்பது பற்றியும் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தார். பிறகு ஒருவர்பின்னொருவராக ஆறு தோழர்கள் சொற்பொழிவாற்றி முடிந்தவுடன் தலைவர் தோழர் இராமநாதனுக்கு பூமாலை சூட்டப்பட்டது. பிறகு காரியதரிசி எல்லோருக்கும் வந்தனம் கூறஇரவு 10-45 மணிக்கு கூட்டம்இனிது கலைந்தது.

---

5-ம் பக்கத் தொடர்ச்சி

தாண்ட வேண்டுமானால் ஓரடி பின் செல்ல வேண்டியதன் அவசியத்தை அவர் உணர்ந்தார். 1929ல் அரசாங்கக்கூட்டுப் பண்ணை முறை ஆரம்பமாயிற்று. அதே வருஷத்தில்தான் ஐந்து வருடத்திட்டமும் துவங்கி 1933ல் பூர்த்தி பெற்றது. இவ்வேலைத்திட்டம் நாட்டுத்தொழில் அபிவிருத்தியை தனது லக்ஷியமாகக் கொண்டது. முதல் மூன்று வருடங்களில் ரஷியநிலச்சுவான்தாரர்களும், வெளிநாட்டார்கள் சகிக்க முடியாத தொல்லைகளைக் கொடுத்தனர். இந்த ஐந்து வருடத்திட்டம் சிறிது வெற்றியளித்திருந்த போதிலும் இதன்பூரண வெற்றியையும், பலனையும் தற்போது நடந்துவரும் இரண்டாம் ஐந்துவருடத்தின் முடிவில் தான் கணிக்க முடியும்.

"ரஷியாவின் பரிசீலனையைப் பற்றி அநேகர் தப்புப் பிரசாரம் செய்துவருகின்றனர். மிகவும் கேவலமான முறையில் உண்மைகளைத்திரித்துக்கூறுகின்றனர். ரஷியத் தொழிலாளி இதுவரையில் எந்தத் தொழிலாளியும் ருசித்திராத ஓர் புதுவாழ்வினை ருசிக்கின்றான். ரஷியாவில் தற்போது தொழில்கள் தீவிர மேம்பாடடைந்திருக்கிறது, என்றாலும் ரஷியர்களின் வாழ்க்கைத்திட்டம் இன்னும் உயரவில்லை. கூட்டுறவால் அதிக சௌக்யத்தையும், கூட்டு விவசாயத்தால் அதிகப்பலனையும் அடையமுடியுமென்பதை மூலையில் உறங்கிக்கிடந்த ரஷியத்தொழிலாளி பிரத்தியக்ஷமாய் உணர்ந்து விட்டான். ரஷியாவின் பிரச்சினைகள் அநேகம். ரஷியா உலகிலுள்ள பல தேசங்களில் ஒன்றாகையால் பிறதேசங்களின் நிலைமையும் ரஷியாவை பாதிக்கின்றது. பொருள் அபிவிருத்தி, வியாபாரம் முதலியன சர்வதேச நிலையைப் பொருத்திருக்கிறது.

"எது எப்படி இருப்பினும் ரஷியா இன்று உலகத்திற்கு ஒரு புதிய தத்துவத்தைக் கொடுத்திருக்கிறது. ரஷியாவிற்கும் மதத்திற்கும் இடமில்லை, மதம் துறத்தி அடிக்கப் படுகிறது. இது நம் நாட்டு வைதீகப் பெரியார்களுக்குப்பிடிக்கவில்லை. புரட்சிக்கு முன் ரஷியர்கள் மூடர்களாயும், அறியாமைக் களஞ்சியங்களாகவு மிருந்தனர். ரஷியா மதத்தைவெறுங்கையோடு துறத்தவில்லை, விஞ்ஞானம் என்னும் கூராயுதம் கையிலேந்தி போர் புரிந்து வெற்றி பெற்றது.

ரஷியா விஞ்ஞானத்தை அடிப்படையாகக்கொண்டு வேலை செய்து வருகிறது.

இந்த தேசத்தில் சிறுபான்மை வகுப்பாருக்கு எவ்விதம் பாதுகாப்பளித்து சமூக நியாயத்துறைகளில் அவர்களை முன்னுக்குக் கொண்டுவருகிறார்களோ அஃதேபோல் ரஷியாவிலும் மிகவும் தாழ்ந்து கிடக்கும் மக்களுக்கு போல்ஷ்விக் அரசாங்கம் அவர்களின் முன்னேற்றத்திற்கான சகல உரிமைகளையும் அளித்துளது. துருக்கிஸ்தானம், காகேஷஸ் பிரதேசங்கள் சிறிது சிறிதாக அபிவிருத்தியாக்கப்பட்டு தொழில் மேம்பாடடைய இடமாகப்பட்டிருக்கிறது. ரஷியர்களிடையே கல்வியைப்பெருக்குவதற்காக போல்ஷ்விக்கர்கள் பலதிரப்பட்ட புராதன பாஷைகளை நீக்கி அதற்குப்பதிலாக லத்தீன் பாஷையைக் கையாளுகின்றனர். கல்வி முற்போக்கிற்காக எடுத்துக்கொண்ட அதிதீவிரமுயற்சியின் பயனாக இன்று ரஷியாவில் கிராமாந்திரங்களில் படித்தவர்கள் எண்ணிக்கை 100 க்கு 90 ம்; நகரங்களில் படித்தவர்கள் 100 க்கு 97 மாக அபிவிருத்தியடைந்திருக்கிறது.

### பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பு.

"சோவியத் கவர்மெண்டின் மற்றொரு வெற்றி பெண்கள் குழந்தைகள் விஷயமாக எடுத்துக்கொண்ட பிரயாசைப்பற்றினதாகும். வைத்தியசாலைகள், குழந்தை விடுதிகள், சிறுவர்களுக்குப் பாடசாலைகள் முதலியன எண்ணிக்கையில் பெருகிக்கொண்டே போகின்றன. ரஷியப் பெண்கள் சுயேச்சையாக வாழ்கின்றனர். விவாகரத்து செய்துகொள்ளுவது மற்ற மேல் நாடுகளைவிட ரஷியாவில் மிகவும் சுலபம். இது விஷயமாக ரஷியாவிற்கும், மற்ற மேல் நாடுகளுக்கும் என்ன வித்தியாசம் என்றால் மேல்நாடுகளிருப்பதை விட ரஷியாவில் வஞ்சகம், சுயநலம், சூது, வாது மிக மிககுறைவு. ரஷியாவில் ஒருவன் அல்லது ஒருவள் விவாகரத்து செய்து கொள்ள வேண்டுமெனப்பிரியப்பட்டால் தாராளமாய்ச் செய்து கொள்ளலாம். அதற்காக மற்ற நாடுகளில் நடப்பதைப்போல் மோசம், பொய் பித்தலாட்டங்களைக் கையாளவேண்டிய அவசியமில்லை. ரஷியாவில் விவாகரத்து செய்து கொள்வதற்கு இவ்வளவு சௌகரியமும், சந்தர்ப்பங்களுமிருந்தும் புள்ளி விவரங்களை ஒத்திட்டுப்பார்த்தால் மற்ற நாடுகளில் நடந்த விவாகரத்து எண்ணிக்கையைவிட ரஷியவிவாகரத்து எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்கிறது. ஒழுக்கக்கேடுகளும் சொற்பம். பெண்களும் பொதுவுடமையாக்கப்பட்டு விட்டதுஎன சில விஷமிகள் போட்ட கூச்சல் பெரும் புரட்டே.

"ரஷியாவில் தனிப்பட்டவர்களுக்கு சுதந்திரம் யாதும் கிடையாது: தனிப்பட்டவர்களின் சுதந்திரத்தை அரசாங்கம் பறிமுதல் செய்து விட்டது என்று ஒரு சாரார் குறைகூறித்தாக்குகின்றனர். இதில்சிறிதளவு உண்மையிருந்தாலும் முழுமையும் உண்மையல்ல. ஆனால் ரஷியாவில் எந்த ஒரு மனிதனும் பட்டினியாகக்கிடக்கவோ, அல்லது வேலையின்றி திண்டாடவோ உரிமை கிடையாது. ஒரு குறிப்பிட்ட வகுப்பினரின் உரிமைக்காக ரஷியா போராடவில்லை. ஒருவருக்கு ஒரு மாதிரியும், வேறொருவருக்கு மற்றொரு மாதிரியாகவும் ரஷியா இரண்டகம் செய்யவில்லை. எல்லோரும் மனிதர்களென மதித்து நடத்துகிறது. ஆனால் மற்ற நாடுகளில் விடுதலைச் சுதந்திரம் என்கிற பதங்கள் பாமரமக்களை சுரண்டிச் சாப்பிடும் கூட்டத்தினருக்கு ஒரு போர்வையாக உபயோகப்பட்டு வருகிறது அதாவது விடுதலை, சுதந்திரம் என்ற உயர்ந்ததத்துவங்களின் நிழலில் ஒண்டிக்கொண்டு மக்களைக் கொள்ளை யடிக்கின்றனர். ஆனால் ரஷியாவில் அப்படி இல்லை. விடுதலை என்றால் மக்கள் யாவருக்குமே குறிப்பிட்ட வகுப்புகளுக்கு அல்ல.

ரஷியாவைப்பற்றி மற்றொரு புகார் யாதெனில் தன்னுடைய சட்டங்களுக்கு மக்களைக் கீழ்படியும் படி செய்ய பலாத்காரத்தையும், பயமுறுத்துதலையும் கையாளுகின்றது என்பதே. அது உண்மை என்றே வைத்துக்கொண்டு பார்ப்போம். ரஷியா எல்லாத்துறைகளிலும் புதுமையைக்கையாளத்துணிந்து சமூகத்தை தலைகீழாகமாற்றியமைக்கும் வேலையில் துணிந்தது. பலமாக வேரூன்றி தொன்று தொட்டு வரும் பழக்க வழக்கங்களை வாயளவில் மாற்றியமைக்க முடியுமா? ஓரளவிற்கு பலாத்காரம் வேண்டியே இருந்தது. அது அவசியமுமாகும். என்றாலும் ஜார் அரசாங்கத்தின் பலாத்காரத்தைக்காட்டிலுமா இந்த பலாத்காரம் பெரியது எனக்கேட்கின்றேன்.

ரஷியப்புரட்சி அரசியல் துறையில் மாறுதலை ஏற்படுத்தியதோடு ரஷிய மக்களின் இயற்கை வாழ்விலேயே ஓர் புதிய மாறுதலை உண்டாக்கிவிட்டது. அவர்களின் லட்சியத்திலும் மாறுதல் ஏற்படுத்தியிருக்கிறது. எந்த ரஷியனும் தன்னுடைய சொந்த லாபத்திற்கென்று எதையும் இச்சிப்பதில்லை அதாவது சுயநலம் அடிமாண்டு விட்டது. சமூக நன்மையை உத்தேசித்தே சகலமும் நடைபெறுகிறது. மற்றெந்த நாட்டிலும் இப்படி யில்லை. ரஷியாவில் பணக்காரன் யார் என்றால் அதிகம் தின்னசக்தி பெற்றவன். தான் தனக்கென்று எதையும் ஒருவன் சேமித்து வைக்கக்கூடாது சேமித்து வைக்க அரசாங்கத்திற்கு தான் உரிமையுண்டு. ரஷியாமுழுமையும் தற்போது பொதுவுடமையின் கீழ் வரவில்லை. சிறிது சிறிதாக வந்துகொண்டிருக்கிறது.

"ரஷியாவில் சொற்ப வருமானம் உள்ளவன் முதல், அதிகவருமானமுள்ளவன் வரையில் கணக்கெடுத்துப்பார்த்தால் மீ 50 ரூபில் முதல் 1000 ரூபிள்களுக்குள்ளேயே அடங்கி விடுகிறது. அதே மாதிரி இங்கிலாந்தில் பார்த்தால் மீ 4 பவுன் முதல் 120,000 பவுன் வரையில் செல்லுகின்றது. அதாவது ரஷியாவில் 1 க்கு 20 விகிதமும், இங்கிலாந்தில் 1 க்கு 30,000 விகிதமும் ஜனங்களின் வருவான ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. ரஷியாவில் யாங்கணும் முன்னேற்ற உணர்ச்சி ததும்புகிறது" (தொடரும்)

---

## அம்பலூர் பஞ்சாயத்து கோர்ட் தேர்தல் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

வாணியம்பாடிக்கடுத்த அம்பலூர் கிராம பஞ்சாயத்துகோட்டு தேர்தல் 13-12-34௳ தேதி பகல் 1 மணிக்கு தேர்தல் அதிகாரி தலைமையின் கீழ் நடைபெற்றது. அதில் வட ஆற்காடு ஜில்லாபோர்டு மெம்பர் தோழர் டி கரியகவுண்டர் ஒருபுறமும், தோழர் எ. டி. ராதாகிருஷ்ண மூப்பனார் ஒருபுறமும்நின்றனர். பின் தோழர் டி கரியகவுண்டரவர்கள் நிற்காததால் தோழர் எ. டி. ராதாகிருஷ்ணமூப்பனார் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். மற்றஸ்தானத்திற்கு பட்ட மெம்பர்கள் வருமாறு:— தோழர்கள் எ.டி.ராதாகிருஷ்ணமூப்பனார். கே. பொன்னுசாமி முதலியார், எ. கே. திருப்பதிகவுண்டர், பி. பி. குப்புசாமிகவுண்டர், எ. முருகேச முதலியார், ஆண்டிகவுண்டர் ஆகியவர்களாகுமென ஒருநிருபர் எழுதுகிறார்.

---

## மனித உற்பவம்.

இது தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. இவைகள் சொற்ப காப்பிகளேயிருக்கின்றது. வேண்டியவர்கள் உடனே எழுதிப்பெற்றுக்கொள்க, விலை 8 அணா
22, சவுத்பீச், திருவல்லிக்கேணி,
சென்னை.

## மனிதர்கள் 200 வருஷங்கள் வாழலாம் என்றால் கடவுள் சித்தம் என்ன ஆவது?

### ஒவ்வொரு நகரத்துக்கும் ஒரு குரங்குப் பண்ணை

டாக்டர் வாரனாப் யோசனை

ஜாவாவில் குரங்கு வேட்டை.

கிழவர்களைக் குமரர்களாக்குவதில் நிபுணரெனக் கருதப்படும் டாக்டர் வாரனாப், தம்முடைய சஸ்திரசிகிச்சை முறைகளால் மனித வர்க்கத்தை 200 வருஷங்கள் வரை வாழச்செய்யலாமெனக் கூறுகிறார். ஐரோப்பாவில் பலர் 100 வருஷங்கள் உயிர் வாழ்வதுபோல, உலகமெங்கும் இருக்க முடியும் என்று அவர் கருதுகிறார். அதற்கு குரங்குகள் அவசியம். இன்னும் கொஞ்சகாலத்தில் அவருடைய முறைகள் உலகமெங்கும் பின்பற்றப்படும் என்றும், ஒவ்வொரு நகரத்திலும் ஒரு குரங்குப் பண்ணை இருக்குமென்றும் அவர் கருதுகிறார். அவரிடம் சிகிச்சை செய்து கொள்ளுகிறவர்கள் பாலியர்களாகி விடுவதாகவும், ஒருவர் 92-வது வயதில் திடகாத்திரரா யிருப்பதாகவும் தெரிவித்தார். 60 வயதில் சிகிச்சை பெற்ற மற்றொருவர், 5 வருஷங்களுக்குப் பிறகு மறுமணம் செய்துகொண்டாராம்.

இதற்கு வேண்டிய சரியான குரங்குகளைத் தேடிப்பிடிப்பதற்காக அவர் ஜாவாவுக்குப் போகிறார். கிப்பன், உராங் உடாங் குரங்குகளையும் அவர் உபயோகித்துப் பார்க்கப்போகிறார்.

மரணம் நிச்சயமே என்றாலும், மூப்பில்லாமல் வாழ்நாளை மனிதர்கள் கழிக்கலாம் என்பது அவருடைய கருத்து.

இந்த சிகிச்சை செய்து கொள்ளுகிறவர்களுக்காவது, அவர்களுடைய குழந்தைகளுக்காவது குரங்கின் குணங்கள் வந்து விடுமென்று அஞ்ச வேண்டியதே யில்லை என்று அவர் உறுதி கூறுகிறார்.

---

### பௌத்தசங்கத்தேர்தல் பொதுக்கூட்டம்.

கோலார்தங்கவயல் சாம்பியன் ரீப்ஸ் தென்னிந்திய பௌத்த சங்கத்தின் வருடாந்திர தேர்தல் பொதுக்கூட்டம் கடந்த 15-12-34ல் சனிக்கிழமைமாலை 6மணிக்குமேல் மேற்படி சங்கத்தில் தோழர் ராஜா பாதூர் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் 60-அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தார்கள். கீழ்க்கண்ட நிர்வாகிகளைத்தேர்ந்தெடுக்கப்பட்டது. "தமிழன்" ஆசிரியர் தோழர் ஜி. அப்பாதுரையார் அவர்களை தலைவராகவும், தோழர் வி. கே. ஆறுமுகம் அவர்களை, உபதலைவராகவும், தோழர்கள் எம். மாணிக்கம், எஸ். கிருஷ்ணசாமி ஆகியவர்களை கௌரவ காரியதரிசிகளாகவும், தோழர் வி பி. தாண்டவராய ஜமேதார் அவர்களைக் கமிட்டித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. தேர்தல் முடிந்த பின் தலைவர் முடிவுரை கூறியவுடன் தோழர் ஜி. எஸ். ராஜன் அவர்களால் நிர்வாகிகளுக்கு மலர் மாலை சூட்டி வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 8-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

---

### துறையூர் சுயமரியாதைச் சங்கம்.

19-12-34ந்தேதி மாலை 5மணிக்கு சங்கத்தில் நடைபெற்ற நிர்வாகக்கமிட்டிக் கூட்டத்தில் அடியில் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சென்னை அட்வோகேட் தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களை புதிய அசம்பிளி நியமன அங்கத்தினராக தேர்ந்தெடுக்கவேண்டுமென்று மே. த. சென்னை கவர்னர் அவர்களையும், மே. த. வைசிராய் அவர்களையும் இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

ராஜாசாஹெப் பொப்பிலி அரசர் அவர்கள், இம்மாதக்கடைசிக்குள் தோழர் ஈ. வி. ஆர். அவர்கள் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும் கட்சிக்காக தமிழ் தினசரி பத்திரிகை ஆரம்பிக்க வேண்டுமென்றும் இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

மாகாண சுயமரியாதை மகாநாட்டை விரைவில் கூட்ட வேண்டுமென்று தலைவர்களை இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

---

### இராமநாதன் நிதிக்கமிட்டி, மதுரை.

ஓர் வேண்டுகோள்.

18-11-34ல் மதுரை கிருஷ்ணராயர் தெப்பக்குள மைதானத்தில் கூடிய மதுரை நகரவாசிகளின் கூட்டத்தில், 15-11-34ல் சென்னையில் காலஞ்சென்ற பொதுநல ஊழியர், ஜே. என். ராமநாதன் அவர்களின் குடும்பத்துக்கு பொது மக்களிடம் ஒரு நிதி வசூலிக்க வேண்டுமாய் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பொதுநல ஊழியத்தை ஆதரிக்கும் மகா ஜனங்கள் எல்லோரும் இந்நிதிக்கு தங்களாலியன்ற பண உதவியைச் செய்யும்படி நாங்கள் பொது மக்களைக் கேட்டுக் கொள்கிறோம். அடியில் கையொப்பமிட்டுள்ள எங்களில் யாரிடமாவது, மேலே கண்ட நிதிக்குப்பணம் கொடுக்க விரும்புவோர் பணம் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம். வெளியூர் நண்பர்கள் இந்நிதியின் பொக்கிஷதாரரான ஏ. ஏ. ஆறுமுகம் அவர்கள், முனிசிபல் கவுன்சிலர், வியாபாரம், வெங்கலக் கடைத்தெரு மதுரை, என்ற விலாசத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம் என எல். கே. துளசிராம், அட்வகேட். ஏ. பி. முகம்மது சுல்தான் " டி. கொண்டைய நாயுடு, ஹானரரி மாஜஸ்டிரேட். எஸ். தியாகராஜன், லாண்டு லார்டு (உத்தமபாளையம்) ப. வ. சோமசுந்தரம், வியாபாரம். ஆ. அ. ஆறுமுகம், வியாபாரம். ஆகியவர்கள் தெரிவிக்கிறார்கள்.

---

### தென்னிந்திய நல உரிமைச் சங்கம்

மதுரை கிளை

நாளது 23-12-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு மதுரை குட்ஷெட் தெருவிலுள்ள அட்வகேட் P. ரெங்கசாமி நாயுடு அவர்கள் வீட்டில் ஷை சங்கத்தின் கூட்டம் நடைபெற்றது. அங்கத்தினர்களும் அபிமானிகளும் தவறாமல் விஜயம் செய்திருந்தார்கள் அது சமயம் கீழ்கண்ட விஷயம் ஆலோசிக்கப்பட்டது.

1. நமது இயக்கத்தை பலப்படுத்துவதற்கும், நமது கட்சிக்குள் ஒற்றுமை ஏற்படுத்தி வேலைத்திட்டத்தை நமது கட்சியினர்களால் நடைபெறச் செய்வதற்கும் ஆன வழிகளை ஆலோசித்தல்.

2. நமது கட்சியின் தற்கால நிலைமையில், நமது ஜில்லா மகாநாட்டையாவது, அல்லது மாகாண விசேஷ மகாநாட்டையாவது, நம்முடைய ஊரில் நடத்த ஏற்பாடு செய்தல்.

3. காரியதரிசிகளால் கொண்டுவரப்பட்ட இதர விஷயங்களும் கவனிக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "சமதர்மம்."

ஆசிரியர்:—வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.

தனிப்பிரதி விலை 6 பை.

விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

---

### "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவறாதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளி நாடு ரூ. 5—0—0

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

---

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

ஆசிரியர்:—
மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும், அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0

விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உறையூர், திருச்சி.

---

நாகர் கோவிலிலிருந்து தோழர் பி. சுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்களை ஆசிரியராகக்கொண்டு

### "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளிவருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் „ 2—0—0
3 மாதம் „ 1—4—0

மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.

---

### சிறுவர் அறிவுக்கதிர் வெளியாகி விட்டது.

பாடசாலை மாணவர் மாணவிகளுக்கு ஒரு சிறந்த மாதாந்தரப் பத்திரிகை.

வருஷசந்தா உள் நாடு 0-10-0
„ வெளி நாடு 1-0-0

K. J. வேதமுத்து,
தமிழ்ப் பண்டிதர் L. M.
போதனா முறைப் பாடசாலை
ஈரோடு S. I. R.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

லைப்போல இளைஞர்களை அறிந்தவர் அமெரிக்காவில் வேறு யாரும் கிடையாது. அவர் வாலிபர்களுக்குள் காதல் சுதந்தரம் வெகு அதிகமாக இருக்கிறதென்று தமது நூலில் விளக்குகிறார். அது வழக்கத்திற்கு அதிகமாக இருக்கிறதாவென்பது அவருக்குத் தெரியாது. அவ் விஷயத்தில் புகுந்து சரியான ஆராய்ச்சி செய்தாலொழிய யாருக்கும் உண்மை விளங்காது.

கிழவர்களின் அபிப்பிராயங்கள் உபயோக மற்றவை. இங்கிலாந்திலே கிழவர்கள் வாலிபர்களாயிருந்தபோது பருவ காலம் வித்தியாசமுள்ளதாக இருந்ததென்று சாதாரணமாய் நம்புகிறார்கள். ஆனால் உண்மையில் அப்படியில்லை யென்பதை ருசுப்படுத்த சாக்ஷியங்கள் இருக்கின்றன. நீதிபதி லிண்டுஸி அறிந்து கொள்வது என்னவென்றால் கோவிலுக்குப் போய் உபதேசங்கள் கேட்கும் வாலிபர்க்ளுக்குள்ளும் இளம் பெண்களுக்குள்ளும் தான் காதல் சுதந்தரம் ஏற்பட்டிருக்கிறது என்பது தான்!

புதிய உலகம் தனக்கென்று சொந்தமாகச் சட்டங்கள் செய்துகொள்ள வேண்டும் குற்றத்தைப் பற்றியும் பலவந்தத்தைப் பற்றியும் பயப்பட வேண்டாம். ஜனங்கள் தன்னைக்காப்பாற்றிக்கொள்ளும் மண வாழ்க்கை விஷயமாக ஜன சமூகம் தன் சமுதாய நன்மைகளை பாதுகாத்துக் கொள்ளும். சமுதாயத்தைப் பாதித்து யாருக்கும் தீங்கு செய்யாத தனிப்பட்ட நபர்களின் காரியங்களைக் கோவில்கள் அடக்கியாள முடியாது. இனி வருங் காலத்தில் அதைப் பற்றிய உண்மையை நாம் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். அது ஒரு பெரிய விஷயம். அதைப் பிறகு எடுத்துக்கொண்டு நன்றாக ஆராய வேண்டும்.

கிறிஸ்து மதத்தை எப்படித் திருத்தினாலும், அதை எப்படிக் கலைத்தமைத்தாலும், அதை ஒழிந்து போவதினின்றும் தடுக்க முடியாது. அதன் கொள்கைகளில் ஒன்றாவது கண்டனத்திற்குட்படாமல் இருப்பதில்லை

சிலர் எல்லா மதக் கோட்பாடுகளையும் விட்டு ஒழுக்க அபிவிருத்தி சங்கங்களை மட்டும் வைத்துக்கொள்ளலாமென்கின்றார்கள். இது எப்படி ஒரு பெரிய மதமாகிவிடும் என்பதைப்பற்றிச் சுலபமாய்ப் பரிக்ஷித்து விடலாம். சென்ற நூறு வருஷங்களாக அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் மதாபிமான வைதீகச் சங்கங்களும், கோவில்களுமிருந்தன. அவைகளில் அநேகம் மதக்கோட்பாடுகள் இல்லாமலே இருந்து வருகின்றன. சமீபகாலத்திலிருந்து ஒழுக்காபிவிருத்திச்சங்கங்களும் இருந்து வருகின்றன. அவைகள் நீதி விஷயங்களின் சம்பந்தம் மட்டும் பெற்றிருக்கின்றன. மேலே கூறப்பட்டவைகளில் ஒன்றும் பொது மனிதர்களால் போற்றப்படுவதில்லை. கோவிலுக்குப் போகாத ஆறு கோடி அமெரிக்கர்களும்; மூன்று கோடி பிரிட்டிஷ்காரர்களும் அத்தகைய சபைகளின் கூட்டங்களுக்குப் போவதே கிடையாது. அப்படிப்பட்ட சபைகள் நூறுக்குக் குறைந்தே யிருக்கும். சபையொன்றில் சில நூறு அங்கத்தவர்கள் தான் இருப்பார்கள் அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாவதும் கிடையாது.

நம்முடைய காலத்திற்கு ஞாயிற்றுக்கிழமைக் கூட்டம் தேவையில்லை. அதற்குத் தெய்வவணக்கமோ, அதற்குப் பதிலாக வேறு எதுவுமோ தேவையில்லை. மனிதன் இயற்கையிலேயே சாஸ்வதமான மதப்பற்றுள்ளவனல்லவா? மனிதனிடத்தில் நீங்காத மதப்பிரியம் உண்டு என்று அறிஞர்களான அநேக ஆசிரியர்கள் கூறவில்லையா? அதனால்தான் ஒரு மதம் மறைந்ததும் வேறு ஒன்று அதற்குப் பதிலாகக் கிளம்பிவிடுகிறது என்று அவ்வறிஞர்கள் கூறவில்லையா? இனி வருங்காலத்தில் எது மதமாயிருக்கக்கூடும்? இவ்விஷயங்களைப்பற்றி வேறு புத்தகங்களில் பேசுவோம்.

நவீன நாகரீகத்தில் முன்னேற்றமடைந்திருக்கும் இடங்களின் நிலைமை யென்ன? அங்குள்ள மக்களில் மூன்றில் இரண்டு பாகத்தவர் கோவிலுக்குப் போவதில்லை. அவர்கள் வீட்டில் கடவுளை வணங்குகின்றார்கள் என்றும் யாரும் சொல்லமுடியாது. இந்தத் தேசங்களில் லட்சக்கணக்கான பாதிரிகள் ஜனங்களைக் கோவிலுக்குப் போகும்படி நியாயம் சொல்லிக்கொண்டு தானிருக்கிறார்கள். மனைவிமார்களும் குமாரத்திகளும் தங்கள் தங்கள் ஆடவர்களை அதற்குக் கட்டாயப்படுத்தும்படி தூண்டப்படுகிறார்கள். கோவில்பூஜா முறைகளைக் கூடியவரையில் கவர்ச்சியுள்ளதாக்குகிறார்கள். ஞாயிற்றுக் கிழமைகளின் நீண்ட பூஜா காலத்திற்குப்பதிலாக இனிமையான மாலைப்பூஜைகளை ஞாயிறுதோறும் நடத்துகிறார்கள். சங்கீதம்அதிகமாகவும், பிரசங்கம் கொஞ்சமாகவும் உள்ள கூட்டங்களை நடத்துகிறார்கள். உற்சாகத்தை உண்டாக்கத்தக்க மதக் கற்பனைகளைப் பற்றிய தலையங்கங்களைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துகிறார்கள். சமுதாய ஊக்கம் உண்டாகிறது. கோவில் சம்பந்தத்தோடு சமுதாய வாழ்வு அபிவிருத்தி செய்யப்படுகிறது. ஆடும்படக்காட்சிகள் காட்டப்படுகின்றன. ஒலி பரப்பு உபயோகிக்கப்படுகிறது. புதிய மதங்களான கிறிஸ்துவ விஞ்ஞானம், ஒழுக்க அபிவிருத்தி, தியாசபி முதலியவை பழையவைகளோடு போட்டிபோடுகின்றன.

முடிவு என்ன? உண்மை விஷயம் என்ன? நவீன நாகரீகத்தில் ஜனத்தொகையில் பாதி அல்லது முக்கால் பாகம் இவைகளை யெல்லாம் அசட்டை செய்து கோவிலுக்குப் போக மறுக்கிறது. மதக்கோட்பாடுகள் குறைந்ததற்கேற்ப குறைந்த ஜனங்களே போகிறார்கள். கோவிலுக்குப்போகும்படி ஜனங்களை யாரும் நிர்ப்பந்தம் செய்ய வில்லையென்று வைத்துக்கொள்வோம். பத்து வருஷங்களுக்குக் குருக்கள் மார்கள் எல்லாரும் உலகத்தில் தங்கள் வேலையை நிறுத்திவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். முடிவென்னவாகும்? நீங்களே யதார்த்தமான பதில் கூறுங்கள். நான் என் அபிப்பிராயத்தை இங்கு வற்புறுத்த விரும்பவில்லை. ஆனால் அப்போது இன்னும் எத்தனை பேர் கோவிலுக்குப்போவதை நிறுத்தி விடுவார்களோ என்பதை நினைக்க ஆச்சரியமாயிருக்கின்றது.

மனிதனுக்கு இயற்கையிலேயே மதப்பற்று கிடையாதென்பது வெளிப்படை. நாகரீக மக்களின் தொகையில் பாதிக்கும் குறைந்தவர்களை மதப்பற்றுள்ளவர்களாக வைத்துக் கொள்ள பத்து லட்சம் பாதிரிகளின் மிகுந்த முயற்சி தேவையாக இருக்கிறது.

இயற்கை மதப்பற்றைப்பற்றி பேசும் ஆசிரியர்கள் ஒரு தவறு செய்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பழைய காலததையே கவனிக்கிறார்கள். தற்காலத்தைப்பற்றி அறியாதிருக்கிறார்கள். முன் காலத்தில் ஒரு மதம் போனால் வேறு மதம் உண்டாயிற்று ஆசியாவில் இருந்தது போல படித்தவர்கள் பல நூற்றாண்டுகளாக மதம் ஒன்றும் இல்லாமலே இருந்து வந்தார்கள். எப்படி யிருந்தாலும் நமது காலம் ஒரு புதிய காலமேயாகும். உலகசந்தர்ப்பங்கள் முழுவதும் மாறிவிட்டன. இருபதாவது நூற்றாண்டில் என்ன நேரிடுமென்று யாரும் கூறமுடியாது. மதத்தைப்போற்ற நமது தலைமுறையில் அரசியல் நிர்ப்பந்தத்தையும் உண்டாக்க முடியாது. சென்ற பதினைந்து நூற்றாண்டுகளாக அப்படித்தான் நடந்து வந்திருக்கிறது. மதப்பற்று மனிதனுக்கு இயற்கையல்ல வென்பதை கண்டு பிடித்தோம். அநேகர் மதத்தை விட்டு விட்டார்கள். மதப்புத்தகத்தை யாரும் படிப்பதில்லை. நமது புஸ்தகங்களிலும் பத்திரிகைகளிலும் மதக்குறிப்புகள் காணப்படுவதில்லை. 'மேடைகளில் மதங்கள் கேவலமாய்ப் பேசப்படுகின்றன. அதைக்கேட்டு வேடிக்கை பார்ப்பவர்கள் நகைக்கிறார்கள். ஆடும் படக் காட்சிகளில் மதத்தை ஒப்புக்குச் சேர்த்திருக்கிறார்கள். அது கண்டு ஜனங்கள் புன்சிரிப்புக்கொள்ளுகிறார்கள். மதம் மெதுவாக இறந்துகொண்டிருக்கிறது. அதனால் வாழ்வும் மனமும் கெட்டுப் போகுமா? என்றால் லட்சக்கணக்கான லண்டன் வாசிகளுடைய மனமும் வாழ்வும் கெட்டுப்போகவில்லை, இவர்களைப்பற்றி நான் நன்கு அறிந்திருக்கிறேன். இவர்களுக்கு மதம் கிடையாது. இவர்கள் மதத்தைப்பற்றியும் நினைப்பதில்லை. கெட்டுப்போகுமென்பதும், இயற்கை ஆசை என்பதும், அவநம்பிக்கையில் அபாயம் என்பதும் சாதுர்யமான கட்டுக்கதைகளே யாகும் வாழ்வு நலமானது. அது ருசிகரமானது. லட்சாதி லட்சம் பேர் அதை அநுபவித்தானந்திக்க முடியும். பக்தி மிகுந்த முற்காலத்தில் அவர்கள் அடைபட்டுக்கிடந்தார்கள். மக்களின் விருப்பத்திற்கேற்பகலைகளிருக்கின்றன. அறிஞர்களுக்கு விஞ்ஞானம் இருக்கிறது; இலக்கியம் இருக்கிறது; பெருமைமிக்க தேசமும் கடலும் இருக்கின்றன. நகரத்தில் 1001 வேடிக்கை விநோதங்கள் இருக்கின்றன. மக்கள் வாழ்வு வேகமாய் மாறுதலடைந்து வருகிறது. சரித்திரத்தில் புதிய அத்தியாயம் ஆரம்பமாகிறது. மனிதனுடைய ராஜ்பமும் ஆரம்பமாகிறது. (முற்றிற்று)

---

## "சஞ்சீவி சத்து"

மனிதர் தலைமுதல் கால்வரைவரும் சகல நோய்க்கும் திவ்யாமிர்தம் போன்றது. இதனால் காது நோய், பல்வலி, விஷப்புண்கள், விஷத்தடிப்பு, காலரா, பிளேக், அஜீர்ணபேதி, மாந்தம், பசியில்லாமை, வயிற்றுவலி, இருமல், மயக்கம், ஜுரம், மார்சளி, ஜலப்பு இன்னும் அநேக நோய்கள் மணிநேரத்தில் சொஸ்தமாகும். எல்லோரும் உபயோகிக்கலாம். வாங்கி உபயோகித்து உண்மையை உணருவின்! புட்டி விலை அணா 8.

பண்டிட் வி. கே. கண்ணுபிள்ளை,
மலபார் மெடிகல் ஹால்
218, தங்கசாலை வீதி, சென்னை.

---

## ஏஜண்டுகள் தேவை.

நமது 'பகுத்தறிவு" வாரப் பத்திரிகை விற்பனை செய்வதற்கு

1. பொன்மலை
2. சிவகங்கை
3. திண்டுக்கல்
4. சென்னை
5. கோலார் தங்கவயல்.
6. பொறையார்
7. கோட்டார்

முதலிய இடங்களில் டிபாசிட் கட்டக்கூடியஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர், "பகுத்தறிவு" ஈரோடு

# பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

## பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

## முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

(சார்லஸ் T. கோர்ஹாம் மொழிபெயர்ப்பு)

இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

## நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

(பேர்ட்டிரண்ட்ரசல் மொழிபெயர்ப்பு.)

இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

## மதம் என்றால் என்ன?

(ராபர்ட் G. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

## கடவுள்.

(ராபர்ட் ஜி. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில்உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின் தன்மைகளையும், உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும்விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட்பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 5.

## மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

(பெர்ட்டிரண்ட் ரசல் மொழிபெயர்ப்பு)

இந்நூல் மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது எனபதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

## நான் சம்சயவாதி ஆனதேன்?

(இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில், தான்கடவுளைப்பற்றிக்க வலைப்படாதவனுயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

## பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

## மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். விலை அணா 4

## குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், குடி அரசில்எழுதிய தலையங்கங்களையும், பலமகாநாடுகளில்பேசியபேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணா 6.

## பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

(பாதிரி செனிக்யூ மொழிபெயர்ப்பு.)

இதைப்படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது 1-ம்பாகம் விலை அணா 3.

## பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவை இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை அணா 3.

## மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ, எல். டி. எழுதியது.

இதில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள பேதங்கள் விளக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

## "மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப்பட்டது. இதில் சகல விதமான மூடநம்பிக்கைகளும், விபரமான பதில்கள் இருக்கின்றன. சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணா 6.

ஷை இரண்டாம்பாகம்

சுமார் 115 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

## பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு

ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M.A. மொழிபெயர்ப்பு

இதில் பிரமச்சரியம் என்னும் பெயரால் பல பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணா 4.

## மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

விலாசம்:—

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

---

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)

விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கைவீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும் விலை அணா 4.

## பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.

அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால், மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். எ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் 1½ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும்.

விலை அணா 2.

## பர்னார்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னார்ட்ஷா அவர்கள் அமெரிக்காவில் ரஷ்யாவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும். விலை அணா 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது. விலை அணா ½.

## மநுநீதி விளக்கம்.

இது மநுதர்ம சாஸ்ரதிம் என்பதில் உள்ள சூட்சிகளையும், கொடுமைகளையும் விளக்குவது. விலை அணா 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

பண்டிதர் மகாவித்வான் கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. இதில் அகத்தியர் என்பதாக ஒருவர் இருந்ததாகச்சொல்லுவது உண்மை அல்ல என்றும் அந்தப்படி ஒரு அகத்தியர் இருந்திருக்க முடியாது என்றும் தமிழ் சங்கங்கள் என்று சொல்லப்படுபவை கூட இருந்திருக்க முயடியாது என்றும் சரித்திர ஆராய்ச்சியுடன் எழுதப்பட்டதாகும். விலை அணா 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

இது வடலூர் ராமலிங்க சுவாமி என்பவரால் சமதர்மத்தை ஆதரித்துப்பாடிய பாட்டுகள். விலை அணா 2.

## விவாக விடுதலை.

தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்., அட்வகேட் அவர்களால் எழுதப்பட்டது. இது நமது "இந்து"ப் பெண்களுக்கு விவாக விடுதலையின் அவசியத்தை வலியுறுத்துவதுடன் அது சம்மந்தமான சாஸ்திரஏற்பாடுகளையும், சட்டங்களையும் விளக்குவதுமாகும். மிகவும் ஆராய்ச்சித்திரம் கொண்டது. தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் மேல் நாட்டுப் பிரயாண உருவப்படமும், மதிப்புரையும் கொண்டது. விலை அணா 0—4—0

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.